# ஞானசம்பந்தம்

தருமபுர ஆதீனத் திங்கள் வெளியீடு

மலர் 19] விகாரி ஆண்டு தைத்திங்கள் 10—2—60 [இதழ் 3



தருமையாதீனத்திற்குச் சொந்தமான
குத்தாலம் ஸ்ரீ உக்தவேதீசுவரசுவாமி தேவஸ்தானம்
சுவாமி விமானக் கும்பாபிஷேகக் காட்சி

குருபாதம்

# "ஞானசம்பந்தம்"

ஆசிரியர் :-

**வித்துவான். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள்**

துணை ஆசிரியர் :-

**வித்துவான். முத்து. சு. மாணிக்கவாசகர்**

## உட்பொருள்

| | | பக்கம் |
|---|---|---|
| 1. | சிவ ஞான போதம் | ... 131 |
| 2. | ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்களின் வாழ்த்துரை | 134, 139 |
| 3. | பிற்சேர்க்கை | ... க, ச |
| 4. | வரவேற்பிதழ்கள் | ... 142 |
| 5. | அரியசுவடிகள் - சமயநூல்கள் | ... 155 |
| 6. | கம்பராமாயணக் கலக்கமும் தெளிவும் | ... 160 |
| 7. | பழந்தமிழ் நூல்களில் உயிர் வகைகள் | ... 163 |
| 8 | தருமையாதீன வெளியீடுகள் | ... 165 |
| 9. | செய்திகள் | ... 168 |
| 10. | எதிர்காலம் | ... 176 |

---

## ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி வாழ்த்து

தருமைத் திருக்கயிலை வழிவந்து கயிலையைத்
தரிசித்த பரம குருவே
சைவம் தழைக்கவாழ் தெய்வம் களிக்கவாழ்
தருமம் எல்லாம் வளரவாழ்
தருமையும் ஓவாதநின் தாமரைக் கைகள்
தருங்கோடை வளங்களையெலாம்
சாற்றவா யிரநாவினனும் அஞ்சும் அடியனே
தவருதுரைக்க வல்லேன்
பெருமைமிகு திருமடத் துற்றிறைஞ் சுந்தொண்டர்
பெறுகைகள் வாய் கழுத்தும்
பெருமான தாலயப் பணிகளும் கவசமுதல்
பேரணிகளும் நூல்களும்
அருமையபி டேகமோ டருச்சனை விழாக்களும்
அனைவோரும் அறியச் சொலும்
அழகு சொக்கேசனே அணிகயிலை வாசனே
ஆநந்த பரமேசனே.

முத்து. சு.

---

உ

வாழ்க உலகெலாம்!

# ஞானசம்பந்தம்

[ தருமபுர ஆதீனத் திங்கள் வெளியீடு ]

மலர் 19 } விகாரி - தை 10—2—60 { இதழ் 3

உ

திருச்சிற்றம்பலம்

போன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. (சம்பந்தர்)

திருச்சிற்றம்பலம்

# சிவ ஞான போதம்

( மலர் 19, இதழ் 2, பக்கம் 64 இன் தொடர்பு )

"பண்ணையும் ஓசையும் போலப் பழமதுவும்
எண்ணுஞ் சுவையும் போல் எங்கும்ஆம்—அண்ணல்தாள்
அத்துவிதம் ஆதல் அருமறைகள் ஒன்றென்னு
தத்துவிதம் என்றறையும் ஆங்கு"

இதிற் பண்ணையும் ஓசையையும் என்றிருந்து ஓசையைச் சார்ந்த இரண்டனுருபு தவிர்ந்திருக்கும்போலும். அதனை மாதவச் சிவஞான முனிவர் உரையால் ஊகித்தறியலாம். 'பண்ணை என்னும் ஐகாரம் பகுதிப்பொருள் விகுதி, பண் பாலைப்பண் முதலாயின'. என்று உரைத்தருளியது காண்க. 'ஓசையையும்' என்று உள்ளவாறே இருப்பின்,

ஐகாரம் பகுதிப் போருள் விகுதியாகாது. 'பகுதிப்போருள் விகுதி' என்பது பிற்காலத்துப் போலியிலக்கணக் குறிப்பு. பகுதி விகுதி என்னுஞ் சோற்களும் வடசோல். அவை நன்னூலார் காலத்தின் முன்னர்த் தமிழில் இல்லை. முதனிலைப் போருளில் வந்த இறுதி நிலை என்று அதைப் புலப்படுத்தலாம். ஆயினும் அது போருளன்று. ப்ரக்ருதி விகிர்தி என்பவற்றின் தோற்றமே அவை. பண்ணையும் ஓசையையும்போல எனக்கோள்வது நன்று. பழமது என்புழிப் பழம் அது எனப் பிரித்துப் பகுதிப்போருள் விகுதி என்னினும் கோள்வார் உளர். மது - கள். பழமது - பழச் சாறு, மதுவும் சுவையும் போலும் அத்துவிதம். 'போல்' என்று தனித்தனி யிருத்தலின் இரண்டனுருபு பின்னிணையில் இல்லாமையால் குற்றம் ஆகாது. விரித்துரைத்தலும் போருத்தமே.

தடை : (அ) ஏகம் (ஒன்று) ஆகிய பிரமத்தை ஏகம் என்றல் போருந்தும். எவ்விடத்தும் அவ்வாறே ஏகம் என்னுமல் சில இடங்களில் பிரமம் அத்துவிதம் என்றும் பேதம் கூறியது ஏன் ?

(ஆ) அத்துவிதம் இருபோருட்கண்ணது எனக் கோள்ளின் ஒரு போருளை அத்துவிதம் என்றல் போருந்தாது.

விடை :- (அ) இவ்வுதாரணம் 'அவையே தானேயாய்' என்பதை வற்புறுத்துவதற்கு எடுத்துக்காட்டுவது. அச் சுருதி 'பிரமப் போருள் ஒன்றே' என்ற போருள்பற்றியது 'ஒன்றேபதி,' 'ஒன்று என்றது ஒன்றேகாண்' அப் பிரமத்தை 'ஒன்று' என்று கூறும் நீ அப்பதிக்கு வேறுவை. நீயும் அப் பிரமமும் ஒன்றுதல் இந்நிலையிற் கூடாது. நீ பாசத்தோடு உளை. அது பாசமில்லாதது. பாசமில்லாத பதியும் பாசத்தோடுள்ள நீயும் வேறு என்பதற்கு என்ன தடை ? அவன் உளம் ஆகான். உளம் அவனாக மாட்டாது என்று முன் அறிந்துள்ளாய். பின்னும் இத் தடையிட்டாய். பிரமம் ஏகம் என்றது பிரமம் ஒன்றே (ஒன்றேபதி) என்ற தாகும். அநேகேசுவரவாதம் அநர்த்தவாதம் என்றது.

அதனைஇக்காலத்தில் தலைமைப் பன்மை தோன்றிநாட்டுக்குத் தடுமாற்றமாகிய வோட்டுக்குக் காரணமாதலால் அறியாதார் யார்? உலகங்கட்கும் வெவ்வேறு தலைமை உண்டு. எல்லாத் தலைமைக்கும் மேலான தலைமை முடிவாக உண்டு. அத் தலைமையில் பன்மை இல்லை, அஃது ஒன்றே; அது பரப்பிரமம்.

(ஆ) பிரமம் அத்துவிதம் என்னும் வேத வாக்கியம், அப் பிரமப்பொருள் உயிர்களின் வேற்றுமையின்றி நிற்பது என்னும் பொருளுடையது ஆகும். ஏகம் என்றதற்கும் பிரமம் அத்துவிதம் என்றதற்கும் ஒரு முரணும் இல்லை. ஒன்றோ பலவோ என்னும் ஐயம் தீர்ப்பது ஏகம் (ஒன்றே பதி) என்பது. அஃது உயிர்களின் எவ்வாறு இருப்பது என்னும் வினவிற்கு விடையாவது 'பிரமம் அத்துவிதம்' என்பது. கடவுள் ஒன்றே. ஒரே கடவுள்தான் உண்டு. பல கடவுள் இருத்தல் இயற்கைக்கு ஒவ்வாது. ஒரே கடவுளாயிருந்தும் பலவுயிர்களிலும் கலந்து வேறுபாடின்றி இருக்கிறது. இவ்வுண்மையை உணர்த்தும் அவ்விரண்டும் முரண்படா. இதனால் அவையே தானேயாதல் வலியுறுத்தப் பட்டவாறு அறிக.

குணமும் குணியும்போல உடன் ஆகியும் அவ்வாறு உடன் ஆகாமைக்கு அநுபவம் காட்டி 'எங்கும் ஆம் அண்ணல் தாள்' என்று விசேடித்த பொருத்தம் உணர்க. பண்ணும் ஓசையும் பழச்சாறும் சுவையும் முறையே குணிகளும் குணங்களும் ஆதல் விளங்கும். அண்ணல் குணியும் தாள் குணமும் போலக் கொள்ளப்படினும் அக் காலாதீதநிலையிற் குணகுணிபாவம் இல்லை. ஆன்மாவின் உணர்ச்சிக்குவரச் செய்யவேண்டியும் முத்தி நிலையில் துரியம் துரியாதீதம் ஆகிய இரண்டு நிலையையும் பகுத்துணர்த்தவும் அப்பாகுபாடு கருவியாயிற்று. உண்மையில் 'சிவ' என்னும் இரண்டிற்கும் அக்குணகுணிபாவம் இல்லை.

(தொடரும்)

கங்கைகொண்டசோழபுரத்தில் நடந்த
ஏகதின லட்சார்ச்சனைத் திருநாளில்

தருமையாதீனம் இருபத்தைந்தாவது

## ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள்

அருளிய

# வாழ்த்துரை

24—1—60

அன்பர்களே! இந்த நன்னாளில் கங்கைகொண்டசோளேச்சரத்தானின் திருவருள் துணையால் அப்பெருமான் அருணிழலில் நாமெல்லாம் கூடியிருக்கின்றோம். இன்று இங்கே பெருமானை வழிபட்டதனால் நம் பிறவி புனிதம் அடைந்தது. இத்தகைய வழிபாடுகள்தாம் மனிதனை மனிதனுக்கும் நற்றுணையாவன. வழிபாடு இல்லையென்றால் வாழ்வே இல்லை. அரசன் ஆனாலும் தனி மனிதனானாலும் திருவருள் துணையிருந்தால்தான் உய்ய முடியும் என்பதற்கு இப்பெருங் கோயிலைக் கட்டிய கங்கை கொண்ட சோழப் பெருமன்னனே சான்றுவான். தனது வட நாட்டுப்படையெடுப்பின் பேருவெற்றியை அருளிய சிவபெருமான் திருவடிகட்குத் தன் அன்பின் பரிசாக இத் திருக்கோயிலைக் கட்டினான் அச் சோழப் பெருமன்னன். அவனது பரந்த உள்ளத்தை இங்கே பெருமானின் திருமேனியாக நாம் காணலாம். எல்லையற்ற அன்பின் பிழம்பாக இப்பெருமானை வழிபட்ட கங்கைகொண்ட சோழன் நல்லுள்ளத்தின் விரிவாக அன்றோ இன்றைய வழிபாடு, பூசனை எல்லாம் நடக்கின்றன.

நம்மிடையே பல இன்னல்கள் உள்ளன. அவ்வின்னல்களை நீக்கி மனத்து அமைதியை அளித்தற்கு அருட்செல்வமே வேண்டும். பொருட்செல்வமோ துன்பத்திற்குத் துணையாக இருப்பது. அதனாலேயே திருவள்ளுவ நாயனாரும்,

" அருட் செல்வம் செல்வத்துள் செல்வம் "

என்று கூறியுள்ளார். அருளற்றார் அற்றாரே என்றும், பொருளற்றார் ஒருகால் பூப்பர் என்றும் அருளியுள்ளார். அவ்வருட்

செல்வத்தைப் பெருக்கி இம்மை மறுமை நலங்களைப் பெறுதற்கே இத்தகைய வார வழிபாடுகள் வேண்டும். அர்ச்சனைகள் வேண்டும். அவ்வாறு செய்யும் அர்ச்சனைகள் செய்வதால் உண்டாகும் பயன்களை நம் ஆசாரியப் பெருமக்கள் அருளி யுள்ளார்கள்.

"இட்டுக் கொள்வன பூவுள நீருள" என்று கூறியவர்கள், "பூக்கைக் கொண்டரன் பொன்னடி போற்றிலார்" இன்ன நிலை அடைவார் என்றும் அருளுகிறார்கள் அப்பர் சுவாமிகள். காலையிலே முழ்கி, அரும்பு மலர்கள் கொண்டு அர்ச்சித்து விளக்கு, தூபம் விதியினால் இடவல்ல அன்பர்களுக்குக் கரும்பினிற் கட்டியாக இனிப்பான் கடவூர்ப்பெருமான் என்றும் பிறிதோரிடத்தில் அருளுகிறார்கள்.

பெரும்புலர் காலைமூழ்கிப் பித்தர்க்குப் பத்தராகி
அரும்போடு மலர்கள்கொண்டாங் கார்வத்தை உள்ளேவைத்து
விரும்பிநல் விளக்குத்தூபம் விதியினால் இடவல்லார்க்குக்
கரும்பினிற் கட்டிபோல்வார் கடவூர்வீ ரட்டனாரே.

வானவர்களும் மலர்தூவி முப்போதும் முடிசாய்த்துத் தொழுகின்றார்கள். மண்ணுலகத்தில் வந்து வழிபட்டு இன்பப் பேறடைகின்றார்கள். இதனை அப்பர் சுவாமிகள் பின்வரும் பாடலில் அழகாகக் கூறியுள்ளார்கள்.

கைப்போது மலர்தூவிக் காதலித்து வானோர்கள்
முப்போது முடிசாய்த்துத் தொழநின்ற முதலவனை
அப்போது மலர்தூவி ஐம்புலனும் அகத்தடக்கி
எப்போதும் இனியானை என்மனத்தே வைத்தேனே.

சிவஞானசித்தியாரில் அருணந்தி சிவாசாரியார் வானி லிருக்கும் தேவர்களும் மண்ணிற்கு வந்து அரனை அர்ச்சித்து உய்கின்றார்கள்; ஊன் எடுத்து உழலும் ஊமர்கள் ஒன்றையும் உணரார். அந்தோ என்று இரங்குகின்றார்கள். அந்தச் சாத்திர விருத்தம் பின்வருமாறு :-

மானிடப் பிறவிதானும் வகுத்தது மனவாக் காய
மானிடத் தைந்துமாடு மரன்பணிக்காக வன்றோ
வானிடத்தவரு மண்மேல் வந்தரன்றனையர்ச் சிப்பர்
ஊனெடுத் துழலும் ஊமர் ஒன்றையும் உணரார் அந்தோ.

சென்ற வாரத்தில் திருபுவனத்தில் பெருமான் திருமுன் கூடிநின்றபோது அணுவுக்கு அணுவாய், மகத்துக்கு மகத்தாய் விளங்கும் கங்கைகொண்ட சோளேச்சரத்துப் பெருமான் நம்மை ஆட்கொண்ட குறிப்பே இவ் வார வழிபாடு.

இவ் வார வழிபாட்டின் பயன் நாம் செய்யும் செயல் எல்லாம் சிவன் செயல் என்ற நல்லுணர்வு இருக்கவேண்டும். அதுவே நம் திட்டங்கள் அனைத்தையும் தானே இயக்கிச் செல்லும். அத்தகைய திருவருள் திட்டங்களே நாட்டை உலகை வாழ் விக்கும். ''வானம் துளங்கிலென் மண் கம்பமாகில்என்'', ''நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்'' என்று அஞ்சாத உறைப்புடன் அன்றாடக் கடமைகளையும் வழிபாட்டை யும் செய்தல் வேண்டும். இத்தகைய திருவருள் நம்பிக்கையோடு வாழ்தல் வேண்டும்.

நம் சைவர்கள் திருஐந்தெழுத்துத் தியானத்தை மறக்கலா காது. நனவிலும் கனவிலும் எப்போதும் அத் தியானம் இருந்து கொண்டே இருக்கவேண்டும். ''நாவினுக்கு அருங்கலம் நமச்சி வாயவே'' என்ற அப்பரடிகள் வாக்கு நமது சிந்தனையில் இருக்கவேண்டும். ஆன்மா ஆண்டவன் திருநாமத்தை ஜபித் துக்கொண்டேயிருந்தால் உய்கிறது. இல்லையென்றால் இரு வினைப் பாசம், மும்மலக் கல் இரண்டும் ஆன்மாவை உலகக் கடலில் தள்ளிவிடும். அப் பஞ்சாட்சர ஜபமே கடலிலிருந்து இன்பக் கரை காட்டும்.

பஞ்சாட்சர ஜபம் செய்து திருநீற்றை அணிந்துகொள்ள வேண்டும். திருநீற்றைப் பூசும்போது திருநீற்றுப் பதிகத்தை ஓதியணிதல் வேண்டும். சிவபெருமானும் ''மெய்யெலாம் வெண்ணீறு சண்ணித்த மேனியனாய்'' இருக்கின்றான். அவ் வாறு பெருமான் திருநீறணிவது, தன்னை வழிபடும் அடியார் வினைகள் நீறு (பொடி) படுவதற்காக என்று மாணிக்கவாசகப் பெருமான் அருளியுள்ளார்கள். நம் வினை நீறுவதற்காகப் பெருமான் நீறணி நிமலனாக விளங்குகின்றான் என்ற கருத்தை நன்றாக உணரவேண்டும். அத் திருக்கோவையார்ப் பாடல் பின் வருவதாகும்.

தினைவளங் காத்துச் சிலம்பெதிர் கூஉய்ச்சிற்றின் முற்றிழைத்துச்
சுனைவளம் பாய்ந்து துணைமலர் கோய்து தொழுதெழுவார்
வினைவள நீறெழ நீறணியம்பல வன்றன்வெற்பிற்
புனைவளர் கொம்பரன்னையன்ன காண்டும் புனமயிலே.

கங்கைகொண்டசோழன் சிறந்த சிவபக்தன். அவனது குடியோ "மைவைத்த கண்டர் திருவடியையன்றி மற்றொன்றையும் நினையாத் தெய்வக்குடிச் சோழர்" மரபிற் பிறந்தவனல்லவா? அச்சோழமரபின் பெருமையும் தோன்மையும் சிவபக்திச் சிறப்பும் எடுத்துரைக்கஇயலுமோ? கங்கைகொண்ட சோழனைப்பற்றி எண்ணும்போது கருவூர்த்தேவரை நினைக்காமல் இருக்கமுடியுமா? அப்பெருமான்பாடிய திருவிசைப்பா ஒன்பதாம் திருமுறையில் இடம் பெற்றிருக்கின்றது. அப்பதிகத்தில் இப்பெருமானை அற்புதத் தேய்வம் என்று வியந்து போற்றுகிறார்கள். தன்னைப் பஞ்சாட்சர ஜபத்தால் வழிபடும் அன்பர்களுக்கு இம்மை மறுமை நலமெலாம் தரும் பெருமான் இக் கங்கைகொண்ட சோளேச்சரத்தானே என்று ஏத்தியிருக்கிறார்கள். கருவூர்த் தேவர் நினைப்பு வரும்போது காசிமடம் ஸ்ரீலஸ்ரீ அருணந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களைப் பற்றிய எண்ணமும் எழுகின்றது. தூயசிந்தை, தொண்டு என்னும் நற்பண்புகளால் எல்லோர் உள்ளத்திலும் இடங்கொண்ட அவர்கள் கோடிக்கணக்கான ரூபாய்களை அறக் கட்டளைகளாக்கி யிருக்கிறார்கள். இமய முதல் குமரி வரை எங்கும் அவர்களது அறம் துலங்குகிறது. தமிழுக்கும் சமயத்துக்கும் ஒரு பாதுகாப்பு ஸ்தாபனமாகக் காசி மடத்தை இயக்கி வருகிறார்கள். கையெழுத்துக்கூட 'சிவசிவ' என்ற பெருமான் திருநாமந்தான் என்றால் இவர்களது திருவருள் திறத்தை என்னேன்பது! "தன்னை மறந்தாள் தன் நாமம் கெட்டாள்" என்ற அப்பர் அருண்மொழிக்கு அவர்கள் நல்ல எடுத்துக்காட்டாவார்கள்.

பஞ்சாட்சர ஜபமும், சிவத்யானமும் அன்பர்களை எவ்வண்ணம் வாழ்விக்கும் என்பதற்கு அவர்களைவிட வேறு உதாகரணமும் வேண்டுமோ? இந்த வார வழிபாட்டில் மற்றுமொரு சிறப்பும் உள்ளது. இரண்டு புலவர்கள் சிறப்புப்பெற இருக்கின்றார்கள். ஒருவர், திருச்சியிலே வாழும் ஒரு வேள். வேள் என்றால் விரும்பப்படும் தன்மை உடையவர் என்று பொருள். எல்லோராலும் விரும்பப்படும் தன்மை உடைய இவர் பதினான்கு

சாத்திரங்களையும், பன்னிரண்டு திருமுறைகளையும் ஒரு சிறந்த ஆசிரியரிடம் நன்கு பாடம் கேட்டு உயர்ந்தவர். நல்ல பண்புடையவர். திருக்குறளுக்கு உரைவிளக்கம் கண்டுள்ள நம் அன்பர். இத்தகைமைகளை உடைய சைவத்திரு. ஜி. வரதராஜப் பிள்ளை அவர்களுக்குத் " திருக்குறள் வேள் " என்ற சிறப்புப் பட்டம் வழங்கி வாழ்த்துகின்றோம்

மற்றொருவர் ஒரு சுந்தரேசர். கல்வெட்டு ஆராய்ச்சியிலே வல்லவர். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே இத்துறையிலே பணிபுரிந்து வருபவர். நல்ல பண்புகளை உடையவர். புலவர். திரு. வை சுந்தரேச வாண்டையார்க்கு " கல்வெட்டு ஆராய்ச்சிக் கலைஞர் " என்ற சிறப்புப் பட்டம் வழங்கி வாழ்த்துகின்றோம்.

இவ் வார வழிபாட்டில் – பெருமானுக்கு நடக்கும் ஏகதின லட்சார்ச்சனைத் திருநாளில் கலந்துகொள்ளும் மாயூரம் ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்தர் வார வழிபாட்டுக் கழகத்தாருக்கும் ஏனைய அன்பர்களுக்கும், பட்டம் பெற்றுச் சிறப்புறும் நல்லன்பர்களுக்கும் செந்தமிழ்ச்சொக்கர் திருவருளும், கங்கைகொண்ட சோளேச்சரர் தண்ணருளும், குருவருளும் பெருகுக என்று வாழ்த்துகின்றோம்.

---


குமரகுருபரன் — ஆண்டுச் சந்தா 1 — 50

தருமையாதீனத்து முனிபுங்கவரும், ஸ்ரீ காசி மடத்து முதல்வருமான ஸ்ரீலஸ்ரீ குமரகுருபர சுவாமிகளினுடைய திருப்பெயர்பூண்டு, சமயம், இலக்கியம், அறம் முதலியவற்றை எளிய நடையில் தெளியச்செய்யும் ஆராய்ச்சி விளக்கத்துடன் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களது ஆணையின்வண்ணம் உயரிய இவ்விதழ் வெளிவருகிறது.

விலாசம் :- நிர்வாக ஆசிரியர், உயர்திருவாளர்.
T. M. குமரகுருபரன் பிள்ளை B.A., B.L., அவர்கள்,
" குமரகுருபரன் " ஆபீஸ், ஸ்ரீ வைகுண்டம்,

கங்கைகொண்ட சோழபுரத்தில் ஸ்ரீ பெருவுடையார் திருக்கோயிலில் நிகழ்ந்த
ஏகதின லட்சார்ச்சனை அன்று (24—1—60)
தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள்



திருச்சி திரு. ஜி. வரதராஜப் பிள்ளை B. A., அவர்களுக்குத் "திருக்குறள் வேள்"
என்ற பட்டம் வழங்கிப் பொன்னுடை போர்த்தருளல்

கங்கைகொண்ட சோழபுரத்தில் ஸ்ரீ பெருவுடையார் திருக்கோயிலில் நிகழ்ந்த
ஏகதின லட்சார்ச்சனை அன்று (24—1—60)
தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள்



அண்ணாமலைப் பல்கலைக் கழகம், வித்துவான்,
திரு. வை. சுந்தரேச வாண்டையார் அவர்களுக்குக் "கல்வெட்டு ஆராய்ச்சிக் கலைஞர்"
என்ற பட்டம் வழங்கிப் பொன்னாடை போர்த்தருளல்

கங்கைகொண்டசோழபுரத்தில் தருமையாதீனம்
25 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய
தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்



சண்டேசானுக்கிரகச் சிறபத்தைக் கண்டருளல்

தருமையாதீனத்திற்குச் சொந்தமான குத்தாலம் ஸ்ரீ உக்தவேதீசுவரசுவாமி தேவஸ்தான
மகாகும்பாபிஷேகம் 1—2—60



கடம் எழுந்தருளியாகி வலம் வருதல்

**குத்தாலம் ஸ்ரீ உக்தவேதீசுவரசுவாமி தேவஸ்தானத்தில் நிகழ்ந்த மகாகும்பாபிஷேகத் திருநாளன்று அளித்த வரவேற்பில்**

தருமையாதீனம் இருபத்தைந்தாவது

## ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள்

அருளிய

# வாழ்த்துரை

1—2—60

அன்பர்களே! இன்று திருத்துருத்தித் திருத்தலத்தின் கும்பாபிஷேகத் திருநாள். இன்று நம் கயிலை யாத்திரை குறித்து நிகழும் வரவேற்பை அன்பர்கள் கூடிச் செய்வது திருவருள் ஆணைப்படி நிகழ்வதாதலின் ஏற்புடையதாயிற்று. கயிலை யாத்திரையை நாம் செய்தோம் என்று எண்ணுதல் என்றும் இல்லை. உள்ளிருக்கும் செந்தமிழ்ச் சோக்கர் திருவருளும் குருவருளுமே இந்த யாத்திரையை நிறைவேற்றி வைத்தன. நாம் ஒரு கருவியாக இருந்தோம்; அவ்வளவே ஆதலின் அவன் திருவருளை எண்ணி வியந்து போற்று முகத்தான் அமைக்கப்பட்டுள்ள இவை யனைத்தும் செந்தமிழ்ச் சோக்கர் திருவடிகளுக்கே உரியன.

கயிலை யாத்திரை திருவருள் வேற்றி. திருவருள் இருந்தால் எச்செயலையும் செம்மையாக முடிக்கலாம் என்பதே இந்த யாத்திரை உணர்த்தும் படிப்பினை. யாத்திரையில் பல அனுபவங்கள். ஒவ்வொன்றையும் உணர்த்தத் தொடங்கினுல் காலம் போதாது. இன்று நடக்கும் உலக அரசியலில் இந்த நம்பிக்கை நிலவவேண்டும் என்பதே இன்று நாம் கூற எண்ணும் கருத்து. உலகப்போது மறை அருளிய திருவள்ளுவ தேவரும் திருவருளை முன்னிட்டே திருக்குறள் இனிது நிறைவேற்றி யுள்ளார். கற்றதனுல் ஆய பயன் என் கோல் வாலறிவன் நற்றுள் தொழாஅர் எனின்' என்று கேட்கிறுர் திருவள்ளுவர். இந்த நம்பிக்கை இல்லாதவன் தமிழன் ஆகான். கடவுள் நம்பிக்கை இல்லாதவன், திருவருள் உணர்ச்சி

இல்லாதவன் உண்மைத் தமிழனாக இருக்கமுடியாது. திருக்குறளைப் படித்தவன் - மேடைப் பிரசங்கத்துக்காக அன்றி வாழ்விற்காகப் படித்து உணர்ந்தவன் திருவருள் உணர்வுடையவனாகவே இருப்பான். மேடைப் பிரசங்கம் செயலுக்கு ஓரளவுதான் உதவமுடியும். சொல்லில் சுருக்கமாக இருப்பவனே செயலில் திறம் உடையவனாக இருக்கமுடியும். சைவர்கள் அனைவரும் “ வித்தகம் பேசவேண்டா ; பணிசெய்ய வேண்டும் ” எனச் சேக்கிழார் அருளிய செம்மொழியை நெஞ்சிற்கொண்டு வாழ்தல்வேண்டும்.

“ ஆசையறாய் பாசம்விடாய் ஆனசிவ பூசைபண்ணாய்
நேசமுடன் ஐந்தெழுத்தை நீ நினையாய் — சீசீ
சினமே தவிராய் திருமுறைகள் ஓதாய்
மனமே உனக்கென்ன வாய் ”

என்ற குருஞானசம்பந்தப் பெருமான் திருவாக்கைக் குறிக்கொள்ளுதல்வேண்டும். ஆசை அறுதல்வேண்டும். ஆசை அறுமின்கள் ஆசை அறுமின்கள் ; ஈசனோடாயினும் ஆசை அறுமின்கள் என்று கூறும் அருள்மொழியை உணரவேண்டும். அழியும் உலகியற் பொருள்மீது வைப்பது ஆசை ; அழியாப் பொருளிடம் வைப்பது அன்பு ; இவ்விரண்டிற்கும் உள்ள வேற்றுமையை அறிந்துகொள்ளுதல் வேண்டும்.

ஆசையின் வசப்பட்டு உடம்புக்கென்றே வாழ்ந்தால் அது துன்பந்தான் உண்டாக்கும். எத்தகைய துன்பம் ? ஆக்கைக்கே இரை வேண்டும் இரைவேண்டும் என்று தேடி அலையும் துன்பம். காக்கைக்கே இரையாகிக் கழியவேண்டுவதுதான். அதனைப் போக்க என்ன செய்யவேண்டும். பூக்கைக்கொண்டு அவன் பொன்னடி போற்றவேண்டும் நாக்கைக்கொண்டு அவன் நாமம் நவிற்றவேண்டும் என்கின்றார்கள் அப்பர்சுவாமிகள் :

பூக்கைக் கொண்டரன் பொன்னடி போற்றிலார்
நாக்கைக் கொண்டரன் நாமம் நவில்கிலார்
ஆக்கைக் கேயிரை தேடி அலமந்து
காக்கைக்கே இரையாகிக் கழிவரே.

பாசம் விடுதல்வேண்டும். இதற்குமேல் கிரியைவேண்டும். சிவபூசை செய்யவேண்டும். பஞ்சாட்சர ஜபம் தவறாது

செய்தல்வேண்டும். 'நக்கன்நாமம் நமச்சிவாயவே' என்பது அப்பர் அருண்மொழி. சினத்தைத் தவிர்த்தல்வேண்டும். திருமுறைகளை ஓதவேண்டும். திருமுறைகளே இம்மை மறுமை வாழ்வளித்து நம்மை வாழ்விக்கும். திருமுறைப் பாராயணம் செய்தால் மனம் ஒருமைப்பாடு எய்தும். இது யாத்திரை அநுபவத்தால் நன்கு உறுதியாக முடிந்த கருத்தாகும், ஊனினை உருக்கினால்தான் உள்ளொளி பெருகும். உள்ளொளி உண்டானால்தான் 'சோதியாய்ச் சுடராய்ச் சூழ் ஒளிவிளக்காய்' நிற்கும் பெருமானைத் தரிசனம் செய்யலாம். வெறும் பொருளாதார உலகியற் சூழலால் இத்தரிசனம் கிட்டாது. பொருளாட்சி துயரம் தருவது; அருளாட்சியே இன்பம் தருவது. அருள் பெற்றாலேயே நல்வாழ்வு நிலைக்கும்; இந்த உணர்ச்சி இக் கும்பாபிஷேகத் திருநாளில் வருமானால் அதைவிட வேறு நற்பயன் உண்டென்று உரைக்கமுடியுமோ?

செந்தமிழ்ச்சொக்கர் திருவருளால் இதில் ஈடுபட்ட நல்லன்பர்களுக்கெல்லாம் நலம் பல பெருகுக என்று வாழ்த்துகின்றோம்.

" வான்முகில் வழாதுபெய்க மலிவளம்சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம்வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம் ".

---

## தோசை

தமிழ் நாட்டு இல்லங்களில் தவறாது செய்யப்படும் காலைச் சிற்றுண்டிகளில் தோசை என்பதும் ஒன்று; துவி+ஓசை தோசை ஆயிற்று என்பார் சிலர். வேறு வகையாகவும் கூறுவர். தோய்+செய் என்பதே தோசையாயிருக்கவேண்டும். மாவை புளிப்பேறத் தோயச் செய்தலால் தோய் செய் என்று வழங்கிய சொற்கள் அவை. 'செய்' -சை ஆதலை நன்செய்-நஞ்சை, புன்செய்-புஞ்சை தண்செய்-தஞ்சை, முதலிய சொல்வழக்குகளிற் காணலாம். ஆதலின் தோய்செய் - தோசையாயிருக்கலாம்; இது தமிழ் வழக்கு.

— முத்து. சு. மாணிக்கவாசகர்

# வரவேற்பிதழ்கள்

## ‡ திருவாரூர் - விஜயபுரம், ஸ்ரீ இரேணுகாதேவியம்மன் தேவஸ்தான ஆலய நிர்வாகிகள்

சிவநெறி வளர்க்கும் தவத் திருமணியே !

ஆரூருக்கும் தருமைக்கும் உள்ள தொடர்பு சமய வரலாற்றில் என்றும் நினைவு கூரத் தக்க தொன்றாகும். கமலை ஞானப்பிரகாசரை ஞானாசிரியராகக்கொண்ட குருஞான சம்பந்த மாமுனிவர் தருமையில் இட்ட வித்து இன்று உலகெங்கணும் சைவ மணத்தினைப் பரப்பி வருகின்றது. குரு பாரம்பர்யம் வாழையடி வாழையெனத் தழைத்தோங்க இருபத்தைந்தாவது குருமகாசந்நிதானமாக எழுந்தருளியுள்ள தாங்கள் சமயநெறி குன்றி வரும் இந்நாளில் உலகியல் வாழ்விலே உழல்வோரும்கூட உண்மைத் தத்துவத்தை உணரப் பல வழிகளை வகுத்துள்ளீர்கள். பல்லாற்றானும் சமய நெறியை வளர்க்கும் தங்களை வருக வருக என வரவேற்கின்றோம்.

கயிலை கண்ட கயிலாய பரம்பரைத் தவச் செம்மால் !

கயிலாயத்தில் காவல்பூண்டு நிற்கும் திருநந்தி தேவரை அகச்சந்தான முதற் குரவராகக் கொள்ளும் பெருமை வாய்ந்தது சைவ சமயம். அந்த பரம்பரையின் உண்மைப் பொருளை உலகறியச் செய்யத் தாங்கள் திருக்கயிலாய யாத்திரையை வெற்றியுடன் நிறைவு செய்தீர்கள். கடுங் குளிராலும் நச்சுக் காற்றாலும் தங்கள் உடல் தளர்வுற்றாலும் உள்ளம் தளராது

---

‡ திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் 28—12—59 திங்கட்கிழமையன்று திருவாரூர் விஜயபுரம் ஸ்ரீ இரேணுகாதேவி யம்மன் ஆலயத்திற்கு எழுந்தருளியபோது வாசித்தளித்தவை.

ஆளும்நாயகன் கயிலை கண்டல்லால் மீளேனென்ற, உறுதிப் பாட்டினை உளத்தே கொண்டீர்கள். தங்களது யாத்திரை, சமய வரலாற்றில் பொன்னெழுத்தால் பொறிக்கப்பெறும் பெருமை வாய்ந்ததாகும்.

இரேணுகையம்மனின் ஆலயத்திற்கு எழுந்தருளிய ஏந்தலே!

பெண்டிரின் தெய்வக் கற்பு உலகை ஆக்கும்! அழித் திடும்! பெய்யென்றால் மழை பெய்யும்! சமதக்கினிமுனிவரின் இல்லக்கிழத்தியாயமைந்த இரேணுகாதேவியின் பெருமையை அவர்களது தவத் தோன்றல் பரசுராமன் உலகறியச் செய்த நாள்தொட்டு இரேணுகாதேவி தன் தெய்வ நிலையை உலகிற்கு அறிவித்து வருகின்றாள். அவ்வன்னையின் உறைவிடமாய இவ் வாலயத்திற்குத் தாங்கள் எழுந்தருளியது அவள் பெருமையினை உலகு நன்கு அறிவதற்கு ஓர் ஏதுவாயிற்று. இவ்வாலயத்தில் தங்களது திருநோக்குப் பதிந்த புண்ணியத்தால் நாங்கள் விரைவில் இவ்வாலயத்தினைப் புதுப்பித்துக் கும்பாபிஷேகத்தினை இனிதின் நிறைவேற்றுவோம் என்ற மன உறுதியைக் கொள்கின்றோம்.

தவநெறி வளர்க்கும் தண்ணருள் குன்றே!

''நிலையில் திரியாது அடங்கியவரது தோற்றம் மலையினும் மாணப் பெரியது'' என்று கூறினார் வள்ளுவர். அம்மெய்ம் மொழிக்கு இலக்கியமாய்த் திகழும் தாங்கள் பல்லாண்டுகள் சமய பரிபாலனம் செய்து நீடு வாழ்க! வாழ்க! என ஸ்ரீ கமலவசந்தத் தியாகராஜப் பெருமானது திருவடிகளை இறைஞ்சி வாழ்த்துகின்றோம்.

## திருவாரூர் நகர காங்கிரஸ் கமிட்டியினர்

சைவத்திரு பெருமகனாரே!

சைவத்தின் இருப்பிடமாய் தமிழ்த்தாயின் தவப்புதல்வரான தங்களைத் திருவாரூர் நகர காங்கிரஸ் கமிட்டியின் சார்பில் வரவேற்று உபசரிக்கும் பேறு கிடைத்ததற்கு எல்லாம் வல்ல இறைவனுக்கும், தங்களுக்கும் முதற்கண் எங்கள் நன்றியை செலுத்த கடப்பாடுடையோம்.

கயிலம் கண்ட சிவநேசரே!

உறைந்த பனிப்பாறைகளூடே உறுமும் மிருகங்களிடையே மென்னடி நோக இன்னல்பல கடந்து வெற்றிகரமாக நடாத்தி திரும்பிய புனித யாத்திரை கற்பனை செய்ய இயலாத ஓர் கடுஞ்சோதனையாகும்.

தாங்கள் கடந்த பாதைகள் அரசியல் வானில் ஏற்பட்ட இடிமழைகளால் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தும், சீனர்களின் எல்லை ஆக்ரமிப்பில் தாங்கள் கடந்து வந்த அந்தச்செயல், கயிலயங்கிரிவாசனின் அருள்பெற்றதாலேயே இயன்றது.

தமிழ் வளர்க்கும் தலைவரே!

சோழவளநாட்டில் கன்னித் தமிழை கண் இமை என காக்கும் சோழப் பேரரசு இன்று இல்லை. ஆனால் மயிலாடு துறையில் இருந்து தமிழ் ஒலிக்கும் அருளரசு தீர்க்கிறது. சைவம் வளர்க்கும் தாங்கள் அதன் உயிரான தமிழுக்கு ஆற்றுந் தொண்டு ஆற்றுகிறீர்கள். வாரிவழங்க வள்ளல் பெருமக்களான தமிழரசர் இல்லாக் குறையைப் புலவர் மணிகளுக்கு அருளரசு களைகிறது.

சைவப் பெருந்தகையே!

தாங்கள் பல்லாண்டு வாழ்ந்து தமிழ்கூறும் நல்லுலகம் எங்கணும் தமிழோசை எழுப்ப எல்லாம்வல்ல தியாகேசனின் நல்லருள்பெற அவர்தம் பொன்னடி வணங்குகின்றோம்.

**திருவாரூர் - விஜயபுரம் காசுக்கடை வர்த்தக சங்கத்தார்**

சமயநெறி தழைக்கவரு சைவசிகாமணியே!

பொன்னாலும் மணியாலும் ஆன அணிகலன்களை மக்கள் புறக்கோலம்கொள்ள அணிகின்றனர். ஆனால் மக்கள் வாழ்க்கையில் அகத்தின் அழகு மிகவேண்டும். அப்போது தான் உள்ளொளி பெருகும். ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்குவது சமய வாழ்வே. சமயநெறியை மறக்கும் மக்கள் உள்ளம் இருண்டு போகிறது. காமம் முதலிய கள்வர் கரந்துறையும் இடமாகிறது உள்ளம். அத்தகைய அகவிருளை அகற்ற ஞான விளக்கினை ஏற்றுதல் வேண்டும்.

ஞான விளக்கு நல்ல குருவருளால் சித்திப்பது. தவவேடம் தாங்கிய தாங்கள் தருமை ஆதீனத்தின் 25-ஆவது குரு மகாசந்நிதானமாக எழுந்தருளியிருந்து பக்குவான்மாக்களுக்கு நயனத்தால், பரிசத்தால், போதனையால் ஞான செல்வத்தை நல்கிவருகின்றீர்கள். துறவரசாகிய தங்களை இந்த நல்ல நாளில் திருவாரூர் காசுக்கடை வர்த்தகர் சங்கத்தார்களாகிய நாங்கள் மனமுவந்து வரவேற்கின்றோம்.

கயிலைகண்ட கண்ணிய மூர்த்தி !

கயிலை காண்பதற்குப் பண்டு முயன்றோர் பலர். காரைக்கால் அம்மையார் வானமும் மண்ணும் வணங்கும் பேய்வடிவு கொண்டு தலையினால் நடந்துசென்று கயிலைகண்டார். நாவுக்கரசர் இடைவழியில் இறைவனால் ஆட்கொள்ளப்பெற்று மீண்டும் கயிலைக் காட்சியைத் திருஐயாற்றில் கண்டார். அவர் கண்ட தோற்றம் சத்தியும் சிவமுமாய்ச் சராசரங்கள் விளங்கிய தோற்றம் நீரில் தண்மை, அனலில் வெம்மையெனச் சத்தி சிவத்துடன் கலந்து நிற்கும் காட்சியைத் தாங்கள் திபேத் நாட்டிலுள்ள பனிமால் வரையில் கயிலை மலையில் கண்டீர்கள். உடல் தளர்ந்தாலும் உள்ளம் தளராது உவந்து பிரயாணம் செய்தீர்கள். அருவுருவ நிலையில் அம்மையப்பரைக்கண்டு களித்து உண்மைத் தத்துவத்தைப் பலருக்கும் உணர்த்தி உய்விக்கும் தங்களுக்கு எங்கள் உளம்கனிந்த பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கின்றோம்,

அறம்பல புரியும் அண்ணல் !

தங்கள் அருளாட்சியில் தென்தமிழ் செழிக்கின்றது. வடமொழி வானளாவ உயர்கின்றது. புலவர் பேராதரவு பெறுகின்றனர். ஞானசம்பந்தம் மக்களின் ஈனசம்பந்தத்தை அகற்றுகிறது. சிவாலயங்கள் தெய்வ ஒளியைப் பரப்பு கின்றன. ஆவினங்கள் குடம்பால் சொரிகின்றன. நித்திய நைமித்தியங்கள் செவ்விதின் நடைபெறுகின்றன. இவ்வா றெல்லாம் அருளொளியைப் பெருக்கும் தாங்கள் தருமை ஆதீனத்தின் குருமணியாகப் பல்லாண்டுகள் இருந்து சிவ நெறியை வளர்த்து நல்வாழ்வு வாழ்க என ஸ்ரீ கமலவசந்தத் தியாகராஜப்பெருமான் திருவருளைச்சிந்தித்து வாழ்த்துகின்றோம்.

## ‡ திருநள்ளாறு தேவஸ்தான பரிபாலன சபையினர்

**தருமை பெற்ற தவமணியே! வருக!**

பதி எனப்படுவது பல்லோர் புகழ்தல் என்பதற்கு ஏற்ப எழிலும், இயற்கையும் நிறைந்து, கற்ரோர் போற்றும் கல்விக் கூடங்களாலும் அருட் செல்வம் வழங்கும் ஆலயங்களாலும் சிறந்து விளங்கும் தருமைப் பதி பெற்ற திருமணியாய்த் திகழும் குருமணியே வருக வருக.

**அறங்காக்கும் அருள் வடிவே! வருக!**

ஒளி நிறை ஆதவனின் செங்கதிர்கள் உலகமெங்கும் பரவினாற் போல் உள்ளத்தில் உருக்கொண்ட உவகையாம் அருள் ஒளியை கல்விக்கும் கலைநிறை தமிழுக்கும் சைவத் திற்கும் களங்கமில் பல கலைகளுக்கும் பரவச் செய்யும் அருள் நிறை ஒளி உருவே வருக வருக.

**கயிலை கண்ட கடவுள்மா மணியே! வருக! வருக!**

கயிலைக் காட்சியைக் காணமல் மீளேன் என்று கூறிய திருநாவுக்கரசர் கயிலை காட்சியைத் திருவையாற்றிலே காணும் பேறு பெற்ருர்; ஆனல் அடியார்கள் சிலர் கயிலைப் பெருமானின் காட்சியைக் கயிலை மால் வரையிலேயே கண்டார்கள். இந்நிலை இடம் வேறு பட்டிருந்தாலும் காட்சியும் கருணையால் ஏற்படும் அருளும் ஒன்றுதான்.

கயிலைக் காட்சியே காணுத எங்களுக்குத் தங்களின் வருகை கயிலைப் பெருமானின் காட்சியையும் அவர் அருளையும் பெற்றது போன்ற பெருமையை அளிக்கின்றது.

இத்தகைய பெரும் பேற்றை அளித்த கயிலைக் குருமணியை வாழ்த்தி, வணங்கி வருக வருக என வரவேற்கின்ருேம்.

---

‡ திருநள்ளாறு ஸ்ரீ தர்ப்பாரண்யேசுவர சுவாமி தேவஸ்தானத் திற்குத் திருக்கயிலாயபரம்பரைத் தருமையாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணியதேசிக ஞான சம்பந்த பரமாசாரியசுவாமிகள் அவர்கள் எழுந்தருளிய போது 16—1—60 சனிக்கிழமை யன்று வாசித்தளித்தவை.

சென்னை, தருமை ஆதீன மடாலய தேவாலய சமயப் பிரசார நிலையம்
'வேளூர் தேவஸ்தான இறைபணி மன்றம்' 6 ஆவது ஆண்டு நிறைவு விழாத் தலைவர்,



டாக்டர். சர். சி. பி. இராமசுவாமி ஐயர் அவர்களை வரவேற்றல் (31—12—59)

சென்னை, தருமை ஆதீன மடாலய தேவாலய சமயப் பிரசார நிலையம்
' வேளூர் தேவஸ்தான இறைபணி மன்றம் '
திருவெம்பாவை - திருப்பாவை, வேத, ஆகம, ஆறங்க உபநிஷத
மகாநாட்டின் நிறைவு நாளன்று (4—1—60)



சென்னை, அறநிலைய அமைச்சர், நல்லறங்காவலர்,
கனம். திரு. M. பக்தவத்சலம் அவர்கள் தலைமையுரை நிகழ்த்துதல்

தருமையாதீனத்தில் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்களை



இந்திய மத்திய அரசாங்க ரயில்வே துணை அமைச்சர்,
கனம். திரு. S. V. இராமசாமி (பார் - அட் - லா) அவர்கள் தரிசித்தல்

தருமையாதீனம் 25ஆவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்களது
திருக்கயிலாய தரிசன யாத்திரையைப் போற்றி



திருச்சிநகரப் பெருமக்கள் வரவேற்றுச் செய்யும் வழிபாடு

## * திரிசிரபுரத்தில் வாசித்தளித்த நல்வரவேற்பு

கயிலையைக் கண்ட கயிலைக் குருமணியே !

திருக்கயிலாய பரம்பரைக் குருமகா சந்நிதானம் கயிலாய நாதனைக் கண்ட திருவருள் காட்சியோடு இங்கு எழுந்தருளும் பேற்றைப் பெற்ற நாங்கள் பெருமை யடைகின்றோம். தங்கள் வருகை எங்களுக்குச் சிவமணமும் தமிழ் மணமும் கலந்து வீசும் தண்ணளிப் பெருக்கமாகக் கொண்டு வாழ்த்தி வணங்குகிறோம்.

திருச்சிராப்பள்ளியில் இந்த மௌனமடம் சைவப் பரம்பரையில் குறிப்பிடத்தக்க ஞான நிலையம். இங்கே வாழ்ந்த மௌன குருநாதரே தாயுமான சுவாமிகளுக்கு உபதேச குருவாக விளங்கிய பெருமான். அம்மௌனமடம் தருமையாதீனத்தின் கட்டளையாக அமைந்து விளங்குகிறது என்ற சிறப்புத் திருச்சிக்கு உண்டு. இச் சிறப்புள்ள இடத்தில் வரவேற்கும்போது பெரும் பேறுகிடைத்தது எங்கள் நல்வினைப் பயனேயாகும்.

சைவமும் தமிழும் இருகண்ணெனப் போற்றும் தவமணியே !

சோழவள நாட்டுத் தேன் திருக்கயிலாயம் எனும் திரிசிர புரத்துத் தாயுமான செல்வன் தாளிணை மறவாத் தண்தமிழ் ஆசாரியமூர்த்தி எழுந்தருளும்போது மானும் மழுவும் கறைக் கண்டமும் மறைந்த குருவடிவைக் கண்டு கும்பிட்டு வாழ்த்தி மகிழ்வுடன் வரவேற்கிறோம். வருக வருக.

சைவச் செங்கோலும் சார்ந்தார்க்கு அருளும் தண்ணருள் ஆட்சியும் தாங்கும் சிவமணியே !

சென்ற காலத்தின் திறனும், இனி எதிர்காலத்தின் சிறப்பும், இன்று எழுந்தருளப் பெற்றதனால் எற்றைக்கும் திருவருட்

* தருமை ஆதீனம் இருபத்தைந்தாவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் திருக்கயிலாய தரிசனம் செய்து திரிசிர புரத்துக்கு (1—1—1960 விகாரி மார்கழி 17உ வெள்ளி) எழுந்தருளும்போது திருசிரபுரம் நகரப் பெருமக்கள், சைவசித்தாந்த சபை, திருப்புகழ் தத்துவார்த்த சபை, பன்னிருதிருமுறை மன்றம், அருள்நெறி திருக்கூட்டம், உய்யக்கொண்டான் திருமலை ரத உற்சவ கமிட்டியார் முதலியோர் வாசித்தளித்த நல்வரவேற்பு.

போது இந்நாட்டுக்கும் மொழிக்கும் எங்களுக்கும் இடையருது ஈண்டுதலால்; ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகா சந்நிதானத்தின் திருவடிகளை வாழ்த்தி வணங்குகிறோம்.

கூத்தப்பெருமான் திருவருளால் குருமகா சந்நிதானம் இன்றுபோல் என்றும் நீடு வாழ்க என வாழ்த்துகிறோம்.

ஆசார்யமூர்த்திகளின் திருவடி வாழ்க, வாழ்க, வாழிய.

### * திருக்கயிலைத் திரு வேகா தச மாலை

ஞானவிழியின் மனநல முதவுவ
நாடவரிய தனநல மருளுவ
நாயகனது திருவருள் புரிகுவ
கானமலரின் கடிமண முறுவன
காதலடிய ருளமதி லுறைவன
காலனவனி னுயிரடு திறலன
காசிபுனித தலமுத லடைவன
வானமதியின் கதிரினை யுடையன
வானகதவ முனிவர்கள் தொழுவன
வாரிசமல ரிதழ்களை நிகர்வன
வாரிசகமு நிலைபெற நிலைவன
மோனதவரி பனிமலை வலம்வரு
ஞானமுனிவன் நலமிகு சிவவொளி
மேனிதிகழும் படிமிசை புகழ்விளை
மானபுனிதன் நறுமலர் அடிகளே. (1)

---

*திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம் மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிய ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் கங்கைகொண்டசோழபுரத்தில் மகாபிஷேகமும், ஏகதின லக்ஷார்ச்சனையும், துர்க்கை, நவக்கிரஹங்களுக்கு அஷ்டபந்தன கும்பாபிஷேகமும் செய்வித்தருளியஞான்று (24—1—60) பனசைச் சிவனடியார் திருக்கூட்டத்தினர் (T. M. சடையப் பிள்ளை, தலைவர். G. கல்யாணசுந்தரம், செயலாளர்.) சமர்ப்பித்துக்கொண்டது.

பாடல்களை யாத்தவர்: திருமுறைச்செம்மல், வித்துவான், திரு. தா. ம. வெள்ளைவாரணம், தமிழ்ப்பேராசிரியர், செந்தமிழ்க் கல்லூரி, திருப்பனந்தாள்.

அடிசேரத் தந்தவர் குருகாணச் சென்றவர்
அருள்சேரக் கொண்டவர் விடமோடக் கண்டவர்
வடிவாகச் செய்தவர் வளிமாதைக் கண்டவர்
முதலாகப் பற்பலர் வழிசேரப் பெற்றவ!
படிவாழச் செய்தவ! நலமாரச் செய்தவ!
பனியாரத் திண்மலை வலமாகக் கொண்டவ!
அடியாரைக் கொண்டவ! அருள்சேரச் செய்தவ!
அழகேறித் தண்ணிய அடிசேரச் செய்வையே. (2)

வையம் புகழுறு தனமுங் கல்வியும்
வரவேண் டும்மென எண்ணுவிரேல்
ஐயந் திரிபற அருள்சேர் ஞானமும்
அடையப் பெற்றிட உன்னுவிரேல்
சையம் முதலிய மலைதங்கோனென
மகிழும் வெண்மலை சூழ்வரலால்
வையம் கயிலைச் சன்னிதானம்மென
வணங்குந் தலைவா என்பீரே! (3)

என்று மின்பமும் அன்பும் நன்மைகட்
கன்னை யப்பனுய் நண்ணுவார் அடி நண்ணுவார்
கொன்றை வன்னியுங் கங்கை திங்களும்
சூடி மாமறை பாடுவார் மறை பாடுவார்
முன்னி நின்றவர் பன்றி அன்னமாய்
இன்னுங் காண்கிலர் நாடுவார் கைலை நாடுவார்
பொன்னின் மின்னிடு நன்னர்ச் சேவடிப்
போது நம்முடிச் சேர்ப்பமே அருள் சேர்ப்பமே. (4)

சேர்ப்பதுவும் உனதாளே சிற்றடியேம் உனதாளே
சித்துநலம்தருவானே மெத்தகொடைத்தருவானே
ஈர்ப்பதுவும் சிவமேனி ஈத்ததுவும் சிவமேனி
போற்றுவதுன் அருணந்தி ஏத்துவம்யாம் அருணந்தி
ஆர்ப்பதுவும் உயர்காவி பார்ப்பதுவும் உயர்காவி
ஆற்றதவ மணிநீயே மாக்கயிலை மணிநீயே
தூர்த்தர்களை மதியானே ஏத்துசிவ மதியானே
தூய்த்தருமைப்பதியானே வாய்த்தநிதி பதியானே. (5)

பதிகமா யுயர்ஞானம் பகருமா வோருமூவர்
பரசுமா தலமேவிப் பரவியே வருநேசன்
கதிரரா வொளிவீசு கயிலைமா கிரிமேவிக்
கழலினுல் வலஞ்சூழுங் கருணைசேர் தனிவீரன்
அதிபரா யிறைதானம் இருபதோ டோருவேழும்
அருளினுல் முறைபேணு மவனதாள் முடிசூடின்
மதியரா குவர்நல்ல நிதியரா குவர்பத்தி
வலியரா குவர்பாரில் அடியரா னவர்தாமே. (6)

தாமரை மாமலர் போன்னெளி மேவிய
தண்ணடி சூடிடு மடியாராய்த்
தண்மரு தூரவர் நற்கயி லாயபு
ரத்தவர் வேள்ளியம் பலவாணர்
மாமயி டாபுரி மன்னனை வென்றவர்
மன்படிக் காசுபோன் விளையூரர்
மாதமி ழாகரர் அட்சய லிங்கசு
வாமிகள் காவையம் பலவாணர்
சாமநன் மாமறைச் சங்கர மாமுனி
சண்முக சாமிகள் முதலானேர்
தாமடி யார்திருக் கூட்டம தாய்வுறு
தக்கப ரம்பரை வழிவந்த
மாமணி மாகயி லைம்மணி நன்மணி
என்றுனை வாழ்த்திடு நேறிதாராய்
மாபன சைந்நகர் பேர்அருள் நந்திதன்
கண்மணி யாவுறை பேருமானே. (7)

பேருபுவியில் ஞான தந்தை
புகலுசிவ போக சாரம்
புனிதநவ ரத்ன மாலை யதனேடும்
அரியபேரு முத்தி நிச்யம்
பதினறுக லாப்ர சாதம்
அறிதிரிப தார்த்த ரூபம் முதலான
குருமோழிக ளாகி நன்மை
குலவியபண் டார சாத்ரம்
குவலயமே லாம்வி ளங்கத் தருவோனே
வருபனியின் மாக கைலை
மலையைவல மாக வந்த
மலரடிகள் சூட வேணும் அருள்வாயே. (8)

வாயிட்டுக் கட்டிய பாவுக்குப் போற்கவி
வீணர்க்குச் சுட்டிமெய் நாணற்றுச் சுற்றலிர்
கோயிற்குப் பற்ருேடு சேவைக்குப் பற்பணி
ஓய்வற்றுச் செய்தவர் வாகைக்குக் கட்டிரே
ஏயுற்றுக் கற்புடை யாவுற்றுக் கோட்பணி
மாகுன்றைக் கட்பணி வாரச்சுற் றிட்டவர்
தாயுற்றுப் பற்றுவர் தாயத்திற் பற்றிலர்
தாளத்தைப் பற்றிரே சாயுச்யப் பற்றிரே. (9)

பற்றுட னிந்திர னரிதிரு மாலயன்
பலமுனி புங்கவரும்
பரசிய போன்மலே பனிவழி யுங்கிரி
பதமுறச் சூழ்வருவோய்
வற்றில கங்கையு மதியமுங் கோண்டவன்
மலரடி தாங்தோழுவோய்
வடகலே தேன்கலே பலகலே யும்வளர்
தருமபு ரம்பதியே
அற்புத மன்றவர்க் களவில கட்டளே
அருள்அருள் நந்திதன(து)
அகமுற நின்றவ அருளது தந்தவ
மிகுதவ மாமுனியே
கற்றவர் தங்கவி கடலேன முந்திடு
கருமுகி லேமழையே
கருவிஊ துஞ்சிட மலவிரு ளஞ்சிட
அருள்மோழி பேசுவையே. (10)

பேசு நுங்குரல் காணு நும்வழி
பாடு நுங்கவி நாடியே
தேசு விஞ்சிடு வான வேண்மலே
சேரு மேல்லடி சேருமே
பாச வல்விஊ மாசு வேன்றிடு
பாத நன்மலர் ஓதுமே
வாசமேன்கழல் சூடி நின்றிட
மோனம் வந்துபின் ஞானமே. (11)

## *குத்தாலம், பாராட்டு விழாக் குழுவினர்

(எழுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

உலகந் தழைதர நறுநீர் பொழிதரும்
உயர்மா மலேயிலு தித்திட்டே
நலசந் தனமகில் கனபோன் மணிவளே
நறும்பூ திரையிலெ டுத்தேற்ற
இலகும் இடுகரை மணமார் காவிரி
எழிலார் நிழலிலு லாவுற்றே
வலம்வந் தணேதரு சோழர் காவிரி
வளமார் தென்கரை வளருரீர்!

தருமம் ஒளிர்தளிர் தவஙன் மலர்பழஞ்
சால்யோ கங்கனி ஞானம்மா
வருசெந் தமிழ்மொழி பயிலுந் தருமபு
ரம்பார் வளரவ ருந்தேவே!
அருளுஞ் சுப்பிர மணிய தேசிக
அன்பார் ஞானசம் பந்தாளம்
திருகுஞ் சிந்தைநன் நிலேசேர் கருணேசெய்
திருமா கயிலேயின் மரபாவீர்!

தையல் நாயகி தேய்வ வயித்தியர்
தங்கும் புள்ளுறை வேளுரில்
செய்ய சிறுவர்கள் உய்யும் வழியினேச்
செய்யும் நிறுவனம் ஒன்ருேதான்!
செய்குன் றேனவுயர் வீடார் தேருநிறை
சென்னேப் பேருநகர்ச் சிறந்தோங்கும்
சைவ உயர்மதம் விளக்கும் பணிமணே
தந்த குருபர அருள்வாழ்வே

---

* திருக்கயிலாய பரம்பரைத் திருத்தருமபுர ஆதீனத்து, இருபத்தைந்தாவது மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலேச் சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் 1—2—60 திங்கட்கிழமை திருத்துருத்தி (குத்தாலம்) ச் சோன்னவாறு அறிவார் திருக்கோயில் கும்பாபிடேகத்தை நடத்திவைக்க எழுந்தருளிய போழுது, திருத்துருத்தி மக்கள் மகாசந்நிதானம் அவர்கள் திருவடிகட்குச் சார்த்தும் வரவேற்பு வாழ்த்துப் பாமாலே.

காசிப் பதியினிற் சைவந் தழைத்திடக்
கவினுர் திருமடங் கண்டிட்டார்
தேசிற் றிகழ்குரு குமர குருபரர்
செல்வத் திருமொழி தடைப்பட்ட
மாசில் மாமணிக் குரவன் அருள்நிலை
மன்னுந் தருமைவ ளம்பதியில்
தேசம் புகழ்கலைக் கழகம் நிறுவிய
சிவமே எம்மிடை வருவீரால்

பாவித் தகரேனு மூவர் தமிலொரு
நாவுக் கரசவர் சென்ருரோ
தேவிற் பெரியவர் சேவுய்த் திடுபவர்
சேருங் கயிலைம லைக்கன்று
கோவிற் பணிகளை நன்ருய்ப் புதுக்குமெங்
கோவே! கயிலையிற் போய்வந்தீர்
நாவிற் சொலவுரி யாரோ பிறரெலாம்
நாம்போய்த் திரும்பினம் என்போரார்?

அயிலைப் பொருவிழி குயிலைப் பழிமொழி
அபிரா மியையணை கடவூரர்
வெயிலைப் பொருகோடி கோயிற் பணிபுரி
வித்த திறமது சொலவற்ருே?
கயிலைச் சுப்பிர மணியாந் தேசிகர்
கவினுர் குருபரர் அருள்வாழ்க
மயிலைக் கடவிடு பரமா சாரிய
மணிதே சிகர்திரு அருள்வாழ்க

சந்தார் பொழிலிலி ருந்தே குயில்பயில்
தண்கா விரித்துறைத் தேன்பாலில்
சிந்தா குலமொழி திருவா சகமொழி
தேனுர் செவிச்சொன வாறறிவார்
எந்தாய் அரும்பன முலையாள் இடமுறை
எழிலார் துருத்தியில் உறைவார்தம்
முந்தா கியதிருக் கோயிற் புதுக்குட
முழுக்காட் டிடவரு மணிவாழ்க.

## சில குறிப்புகள்

இவ்வேழு பாடல்களும். "கையுந், தலைமிசை, புனையஞ், சலியன, கண்ணும், பொழிமழை ஒழியாதே" என்னும் அடியினை உடைய பெரியபுராணத் திருவிருத்தத்தின் யாப்புடையன.

தருமபுரம் காவிரிக்கரையின் தென்பால் உள்ளது.

மூன்றும் அடியில் வந்துள்ள காவிரி எழிலார் நிழல் என்ப தற்குச் சோலையினது விரிந்த அழகிய நிழல் என்பது பொருள். அந்நிழலில் உலாவிக் காவிரி வருகின்றது.

தருமம் – தளிர்; தவம் – மலர்; யோகம் – பழம்; ஞானம் – யோகம்; ஞானம்மா = ஞானமாக.

நிறுவனம் = அநாதை நிலையம்.

ஆதி குமாரகுருபரர் வாக்குத் தடைபடுதற்குக் காரண மூர்த்தியாய் எழுந்தருளிய மாசிலாமணித் தேசிகர் பீட நிலைச் சிறப்புக் கூறப்பெற்றுள்ளது. அத்தகைய தருமை யாதீனத்து, பல்கலைக் கல்லூரி நிறுவப்பெற்றது பாராட்டப் பட்டிருக்கின்றது.

வித்தகப்பாடல் முத்திறத்தடிகளுள் ஒருவராகிய திருநாவுக் கரசரும் கயிலை செல்ல முயன்று செல்லவில்லை. மகாசந்நிதானம் சென்று வந்துள்ளது என்று சென்று வந்த சிறப்புப் பேசப் பட்டுள்ளது.

திருக்கடவூர்த் திருக்கோயில் திருப்பணி, கும்பாபிடேகச் சிறப்புக்கள் கூறமுடியாத சிறப்பினை உடையன.

திருத்துருத்தின் சிறப்பும் அம்மையப்பர் பெயரும் பேசப் பெற்றுள்ளன.

மகாசந்நிதானம் குடமுழுக்குச் செய்வித்தற்கு வருதற் சிறப்புக் கூறி வாழ்த்தியது

# *அரியசுவடிகள்-சமய நூல்கள்

மதுரை ஆதீனச் செஞ்சொல்மாமணி
**திரு. ச. சிவகுமாரன் M. A., அவர்கள்**
பின்னி வணிக உயர் அலுவலர், சென்னை.

மின்சார விளக்கு ஏற்படுவதற்கு முன்பு மக்கள் கூடுமான வரை பகற்பொழுதில் எழுத்து வேலைகளை முடித்துக்கொள் வார்கள். பகலில் வேறு அலுவல்கள் இருப்பின் இரவில் கணக்கப்பிள்ளை மேசை விளக்கெண்ணெய் விளக்கு சகிதமாக அமர்ந்து எழுதுவார்கள். காகிதமும் அச்சுப் புத்தகங்களும் சில காலத்திற்கு முன்னர் ஏற்பட்டவை; அதுவும் எல்லோ ருக்கும் அவை கிட்டியிருக்கமுடியாது. பெரும்பாலோர் ஓலைச் சுவடிகளில் எழுதியும் ஓலைச்சுவடிப் பிரதிகளைப் படித்தும் வந்தனர். சிறுவயதில் மணலில் எழுதிப் பழகிக் கையெழுத்து நன்ருக அமைந்திருந்தது. எனவே ஓலை ஏடுகளில் எழுத் தாணிகொண்டு எழுதுவது ஒரு சிரமமாக இல்லை. இக்காலம் போல் ஆயிரக் கணக்கில பிரதிகள் அச்சிடமுடியாது. புலவர்கள், பிரபுக்கள் வீடுகளில் ஏட்டுப் பிரதிகள் அருமை யாக இருக்கும். ஒருவர் திண்ணையில் அமர்ந்து மங்கலான விளக்கு வெளிச்சத்தில் ஏட்டுப் பிரதியில் மகாபாரதத்தை, இராமாயணத்தை வசனமாயினும் செய்யுளாயினும் தனக்கே அமைந்த ஒரு ராகத்தில் படிப்பார், மற்றையோர் சூழ்ந்திருந்து கேட்டு மகிழ்வர். இதன் சிரமத்தை "எழுதினவன் ஏட்டைக் கெடுத்தான், படித்தவன் பாட்டைக் கெடுத்தான்" என்ற பழமொழி நன்கு விளக்கும்.

இந்த அரிய ஏட்டுச் சுவடிகளை அடிக்கடி எடுத்துக் கையாண்டாலொழிய அவற்றை வெள்ளேறும்பு செல் அரித்து விடும். நமது முன்னேர்கள் ஏட்டுச் சுவடிகளை மஞ்சள் காப்பிட்டும், உளுத்துப்போன ஏடுகளைப் பிரதி பண்ணியும் பின் சந்ததியார்களுக்குத் தந்து போனர்கள். இயல்பாகவே அக்காலத்தில் நாவல்கள் பொழுதுபோக்கு நூல்கள், வசன நூல்கள் அதிகம் நிலவியதாகத் தெரியவில்லை. இரவிலும்கூட

---

*சென்னை வானெலியில் 8—12—1959 அன்று பேசியது.

ஏடுகளைப் புரட்டிப் பார்க்காமலே ஞாபகத்திலிருந்து சொல்லக் கூடியதாக எதுகைமோனையோடு சுருங்கச் சொல்லி விளங்க வைப்பதாக யாவும் செய்யுள் வடிவில் அமைக்கப்பட்டன.

சைவசமய ஆசாரியர்கள், நாயன்மார்கள், ஆழ்வார்கள், இவர்களது இறையனுபவ வாழ்க்கை அருள் வாக்குகள் மக்கள் மனத்தைக் கவர்ந்தன. அனேகமாக அவர்களது அருட்பாடல்களை அவ்வப்போது உடனிருந்த அடியார்கள் எழுத்தாணிகொண்டு எழுதிச் செப்பனிட்டு வைத்தார்கள். இந்த அருளாளர்களின் பொற்காலம் தொடங்கியே சைவ வைணவ சமயங்கள் மீண்டும் புத்துயிர் பெற்று வளரலாயின. மெய்ப்பொருள் உண்மைகளைத் தோத்திரமாக ஆழ்வார்கள் நாயன்மார்கள் வடித்துக்கொடுக்க அவற்றின் விளக்கமாகச் சாத்திரங்களும் தோத்திரங்களும் எழுதப்பெற்றன. மெய்ஞ் ஞானத்தின் இரு கண்களாம் தோத்திரமும் சாத்திரமும் ஓலைச் சுவடிகளில் எழுதப்பெற்றுப் பாதுகாக்கப்பட்டன.

மன்னர்களும் மக்களும் சமயவளர்ச்சியை மடாலயங் களிடம் ஒப்புவித்தனர். ஆதீன கர்த்தர்கள் சிவராஜதானியின் அருளாட்சியாளர்களாக விளங்கினர். அறிவும் திருவும், அன்பும், பண்பும் வாய்ந்த இப்புண்ணிய சீலர்கள் பல சீடர் களுக்கு ஞானோபதேசம் செய்ததுமன்றிச் சாத்திர தோத்திரங் களையும் குருசிஷ்ய பரம்பரையாகப் பாடம் சொல்லிவந்தனர். அதன் காரணமாக ஆதீன கர்த்தாகளும் தம்பிரான் சுவாமிகள் பலரும் சாத்திர விளக்கவுரைகளும் பாஷ்யங்களும் எழுத லாயினர். இவ்வாறு திருவாவடுதுறை, தருமபுரம், திருப் பனந்தாள்காசிமடம் முதலிய ஆதீனங்களில் அரியசுவடிகள் பல வாய்த்தன.

சமய நூல்களுக்கு முக்கியமாக அருள் வாக்குகளுக்குப் பொருள் விளக்கம் எழுதுவது அநுசிதம் என்றும் சீலம் இல்லாத வர்கள் சாத்திரங்களைக் கற்கக்கூடாது என்றும் புலவர்கள்கூட எண்ணி வந்தார்கள். திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களின் மாணாக்கராகிய முதுபெரும்புலவர் தியாகராச செட்டியார் அவர்கள், தம்மைத் திருவாசகத்திற்கு உரை எழுதும்படி வற்புறுத்தி வந்த ஒரு கனவானோடு காவிரி யாற்றுப் பாலத்தின் மீது மாட்டு வண்டியில் சென்றுகொண்டு

இருக்கும்போது, மீண்டும் கனவான் உரை எழுத வேண்டின மைக்கு "என் சிறுமை எங்கே, திருவாசகத்தின் பெருமை எங்கே! இன்னொருமுறை இவ்வடாத செயலைச் செய்யுமாறு தோந்தரவு செய்தால் இக்காவிரியாற்றில் விழுந்து உயிரை மாய்த்துக்கொள்வேன்" என்று பயமுறுத்தினாராம். வைண வர்கள் சைவர்களைக்காட்டிலும் முன்னேற்றம் உடையவர்களாய், ஆண்டாள் திருப்பாவைக்கு நாலாயிரப்படி, ஆறுயிரப்படி முத லான வியாக்கியானங்களை எழுதிவைத்தார்கள். பேரியவாச்சான் பிள்ளை போன்ற வியாக்கியானகர்த்தாக்கள் திருநேறிய தெய்வத் தமிழுக்குச் செய்துள்ள சேவை மகத்தானது. அரிய சுவடி களாயிருந்த இவ்வியாக்கியானங்கள் பெரும்பாலும் அச்சாகி யிருக்கின்றன.

மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்திய கலாநிதி டாக்டர், உ. வே. சுவாமிநாத ஐயரவர்கள் தமது இளமையிற் கற்று வாலிபத்தில் பல அசௌகரியங்களையும் பொருட்படுத்தாது அன்னம் தண்ணீர் இன்றியும், அல்லும் பகலும் அலைந்து திரிந்து, அரியசுவடியுள்ள இடங்களைத் தேடிக் கண்டுபிடித்து, அவற்றின் அருமை தெரியாத உரிமையாளர்கள் ........... ........... வணங்கிச் சுவடிகளைப் பெற்றுப் பாட பேதங்களையும் பரிசோதித்து, ஐம்பெருங் காப்பியங்கள் சங்க இலக்கியங்கள் முதலானவற்றை ஆதீனங்களின் ஆதரவையும் பெற்று அச்சிட்டருளியமையே இன்றைய தமிழ் வளர்ச்சிக்கு உற்ற துணையாக அமைந்தது என்பது தமிழுலகம் நன்றி யுணர்ச்சி யோடு பாராட்டவேண்டிய உண்மையாகும். ஒருவரே தமது வாழ்நாளில் எவ்வளவுதான் சாதித்துவிட முடியும். ஐயரவர்கள் ஆரம்பித்துவைத்து அரும்பணியை அதிருஷ்டவசமாக ஆதீனங் களும் பல்கலைக் கழகங்களும் கடந்த சில ஆண்டுகளாக மீண்டும் துவக்கி அரிய சமய நூல்கள் பலவற்றைச் செம்மை யாக அச்சிட்டு வருகிறார்கள். பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் இந்நூற்றாண்டின் ஆரம்பத்திலும் முதன் முறை யாக அச்சிடப்பட்ட அனேக அரிய சமய நூல்கள் மறுமுறை அச்சாகாமல், பிரதிகளும் கிடைக்காமல் மறைந்து வரு கின்றன. இவற்றை ஒழுங்கு செய்து திரும்பவும் அச்சிட்டால் மிக்க உபகாரமாக இருக்கும்.

யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலர் பெருமகனார் எழுதிய அரிய நூல்கள் பல இன்று கிடைக்கவில்லை, ஆதீனங்களில்

தத்துவ விளக்கங்களாகவும், வழிபாட்டுக் கிரமங்களாகவும் எழுதப்பட்ட பல அரிய சுவடிகள் இன்னும் அச்சுவாகனம் ஏருமல் இருக்கின்றன.

தஞ்சை சரஸ்வதி மஹால் நூல் நிலேயத்தில் ஸ்ரீ சரபேந்திர மஹாராஜா அவர்களால் அருமை தெரிந்து சேகரித்து வைக்கப் பட்ட சாத்திரம் வைத்தியம் முதலிய கலேச் சுவடிகள் பலவும், சமயசம்பந்தமான அரியசுவடிகள் பலவும் இதுவரை அச்சுக்கு வாராமல் இருக்கின்றன. ஸ்ரீ அப்பைய தீக்ஷிதர் அவர்கள் சைவசித்தாந்த பரமாக எழுதிய சிவத்தியான மாலே என்னும் வடமொழிச் சுவடியும், மதுரைச் சிவப்பிரகாசரால் மேற் கோளாகக் காட்டப்பெறும் திருநேறிய விளக்கம் என்னும் சுவடியும், ஞானசாரம் என்னும் சைவசித்தாந்த சுவடி ஒன்றும், மஹாபாரதத்தில் சிவஸ்தோத்திரமாக வரும் சஹஸ்ரநாமத் திற்கு ஒரு பாஷ்யமும் இன்னும் பலப்பல அரிய சுவடிகளும் சரஸ்வதி மஹாலில் இருக்கின்றன. அடிக்கடி மேற்கோளாக எடுத்து ஆளப்படும் தத்துவரத்ஞகரம் என்ற திருமந்திர விளக்கவுரைச் செய்யுள் நூல் சுவடி யோன்று அடையாறு சாவமிநாத ஐயர் நூல் நிலேயத்தில் இருக்கிறதாகத் தெரிகிறது. இதுவும இதுவரை அச்சாகவில்லே. தத்துவராயர் என்ற புலவர் 14 ம் நூற்றுண்டில் தோகுத்த பெருந்திரட்டு என்னும் நூலில் 136 நூல்கள் குறிக்கப்படுகின்றன. இதில் 107 நூல்கள் கிடைக்கவில்லே.

இன்றும் சமய சம்பந்தமான அந்தாதி கலம்பகம் முதலிய அரிய செய்யுள் வகை நூல்கள் சுவடி வடிவில் எத்துணேயோ இருக்கின்றன. திருவிளேயாடற் புராணக்கீர்த்தனேகள் போன்ற அரிய சுவடிகள் வேறு சில அச்சுக்கு வராதிருக்கின்றனவாம்.

தெற்கு ஜில்லாக்களில் புலவர் பரம்பரை வீடுகளில் சுவடிகள் பல இருக்கின்றன. பெரும்பாலும் அக்குடும்பத்தினர் அச்சுவடி களேத் தம் குடும்பச் சொத்து என்றும் பிறருக்கு அவற்றைக் காட்டல் கூடாதேன்றும் அவ்வாறு அவற்றைப் படித்தவர்கள் யாராவது கண்டால் அவற்றை நூலாக வேளியிட்டுப் பெரும் பணம் சம்பாதித்துவிடுவார்கள் என்றும் தவருக எண்ணிச் சுவடிகள் செல்லரித்துப் போனுலும் சரி, பிறருக்குத் தருவ தில்லே என்றிருக்கிருர்கள். இந்த அவல நிலே மாறவேண்டும்.

அனேகம் கோயில்களில் அவ்வத்தலத்தின் தலபுராணங்கள் அரிதின் முயன்று ஓலைச்சுவடிகளில் எழுதப்பெற்று இன்னும் அச்சில் வாராமல் சிதைந்து போவதாகத் தெரிகிறது. மதுரைத் தலபுராணம், சமீபத்தில் வெளிவந்தது. இதுவரை நாம் கேட்டிராத அனேக அரிய சுவடிகளிலிருந்து இத்தல புராணம் அச்சாகி வெளிவந்தமை படிப்போர்க்குப் பெருத்த பயனையும் மகிழ்ச்சியையும் அளிக்கின்றது. இம்முயற்சி மேலும் பெருகி அனேகம் தல புராணங்கள் வெளிவரல் வேண்டும்.

அச்சுக்கு வாராத சுவடிகளுக்கு நாம் செய்யவேண்டிய முதலுதவி, மேலும் தாமதிக்காமல் அவற்றைப் புகைப்படம் எடுக்கவேண்டும் (Photostat copies); பிறகு வசதியுள்ள போது அவற்றை அச்சிட்டுக்கொள்ளலாம். இந்த விவேக மான அரிய முறையை டாக்டர் சர். சி. பி, இராமஸ்வாமி ஐயரவர்கள் தாம் திருவாங்கூர் திவான் பதவியிலிருந்தபோது அந்தச் சமஸ்தானத்திலிருக்கும் அரிய சுவடிகள் பலவற்றைப் புகைப்படம் எடுப்பித்தார்கள்,

இவ்வாறு சுவடிகளைப் பாதுகாத்தும், பழைய சுவடிகளைப் பிரதி பண்ணியும், புதுவதாகச் சுவடிகளைக் கண்டு பிடித்தும் அவற்றை நடுவு நிலைமையுடைய புலவர்களைக்கொண்டு பரி சீலித்து அச்சிட்டும் உதவினால் தமிழுலகத்தில் மறைந்து கிடக்கும் மாணிக்கங்கள் பல வெளிப்படும். தமிழ் நாட்டின் எதிர்காலச்சிறப்புக்கு இது இன்றியமையாதது; சமய வளர்ச் சிக்குக் காலத்தால் செய்த பேருதவியாகும்.

---

## பன்னெறி விளக்கம்

பெருநாவலர், களமூர், திரு. செ. செல்வப்ப முதலியார் பாடியது.

சேற்றுரைக் கோல்பவர் செங்கோல்கைக் கோள்பவர் சேதமுற
வுற்றுரைக் கோல்பவர் கோபமுட் கோள்பவ ரோங்கு செல்வ
மற்றுரைக் கோல்பவ ரள்ளன் மெய்கோள்பவ ராதரித்த
பேற்றுரைக் கோல்பவர் பேண்டுரை கோள்பவர் பேண்ணமுதே.

வாசமுண் டாவது மல்லிகை மாலையில் வண்மையுள்ள
நேசமுண் டாவது நல்லோ ரிடத்தி னிரதம்பல
மோசமுண் டாவது மாட்டுத் தாகரின் முற்றும்பெரு
நாசமுண் டாவது கச்சேரி வாதி னறுங்குழலே.

# கம்பராமாயணக் கலக்கமும் தெளிவும்

பெருஞ்சோற்கொண்டல், முத்தமிழ் வள்ளல்
**புரிசை. திரு. சு. முருகேச முதலியார் அவர்கள்**

## 1. தசரதன் உயிர்நீத்தது ஏன் ?

(மலர் 19. இதழ் 2. பக்கம் 99 இன் தொடர்ச்சி)

பெரியவர்கள் இப்படி ஒழுக்கமுள்ள ஆறுகளின் உயர்வை யுணர்த்தினர். இந்த ஆறுகளைப் போல, என்றும் குன்றாத நற்குணமுள்ளகுடிகள் அன்றும் இன்றும் என்றும் உள்ளன. அவ்வுயர் குடிமக்கள் தாங்கள் நல்லவையென நாடிநிற்பன அக்குடியில்வரும் மக்களால் மாறுமல் கடைப்பிடிக்கவேண்டிய கோள்கைகள்ாகும். அக் குணங்கள் ஒருவருக்கும் சொந்த மானவையல்ல. அவை குடியின் பொதுப்பொருளாக விளங்கு கின்றன. ஒருவன் தனது தந்தை காலத்தில் கைப்பற்றப் பெற்ற சிறந்த குணங்களில் எள்ளளவும் வழுவாது நடக்கக் கடமைப்பட்டவனாகின்றான். ஆனால் தந்தையின்பாலிருந்த தூய்மையைவிட எக்குடி மக்களும் எவ்வளவு மேன்மைப்பட வேண்டுமானாலும் நடக்கலாம். அது எல்லோராலும் வர வேற்கற்பாலது. தந்தையின் காலத்துப் பெற்ற பெயரிலும் தாழ்பெயரேடுப்பனேல் அதுவே வருந்தத் தக்கது. இதுவே ஒழுக்கத்திற்கு உற்றபொருள். ஒரு ஆறு எக்காலத்திலும் நீரோட்டமுடைத்தாக இலங்குவதுபோல, ஒருகுடி தாழ்விலும் வாழ்விலும் ஒருபடித்தான கோள்கையைக் கடைப்பிடிப்பன வாக இலங்கவேண்டும். அவ்வொழுங்கை மேற்கொண்டு குடியின் கொற்றத்தைத் தன் காலத்தில் தாழ்வின்றித் தாங்கு பவன் யாரோ அவன் ஒழுக்கமுடையவனாவான். அதில் மாறுபடுபவனே ஒழுக்கமற்றவனாகக் கருதப்படுகின்றான். " ஒழுக்கமுடைமை குடிமை இழுக்கம் இழிந்த பிறப்பாய்விடும் " என, ஒழுக்கத்தைக் குடியோடு கூட்டி உரைத்திருத்தலை உன்னவேண்டும். இவ்வொழுக்கத்திற் சாலச் சிறந்தவன் தசரதப் பெருந்தகை. அவ்வண்ணல் தன்குடி முன்னோர்கள் தேடிவைத்தப் பெருங்குணங்களில் என்றுங் கண்ணுங்கருத்து மாக இருப்பவன். தனது குடி முதல்வர்கள் முதற் பிறந்த

திருமகனுக்கே முடிபுனேவின் உரிமையுண்டேனக் கோண்டிருந்தனர். அந்த முறையால் தசரதன் இராமனுக்குத் திருமுடி சூட்டுதலே முறையுடைத்தாகும். அம்முறைமையோடு உலகார்க்கெல்லாம் போதுப்போருளாயினும், வாய்மையைத் தன்மரபுக்கே உரிய போருளாக்கிக்கோண்ட தோல்குடி தசரதன் பெருங்குடி. " ஆரஞர்மூழ்கியும் ஆக்கம் இழந்தும் தாரணியாள் அரிச்சந்திரன் " எனப் பாவலர் புகழும் பண்பை நிலேநாட்டியவன் அண்ணல் அரிச்சந்திரன். அரிச்சந்திரன் காலத்திலிருந்து வாய்மைக்குரியார் மநுகுலத்தரசர் என்ற பேரும்பேயரைக் கோண்டது தசரதன் தோல்குடி. இக்குணத்தையுங் காப்பாற்ற வேண்டியவனுனன் தசரதன். இப்படி இவ்விறைவன் தோல்குடியார் கண்ட மூலபண்டாரங்களில் மரபுமுறையும், வாய்மைமுறையும் ஒப்புயர்வற்றனவாகும். இவ்விரண்டு சேல்வங்களில் ஒன்றைப் பறிகோடுக்கவேண்டிய சோதனேக்காலம் நேர்ந்துவிட்டது தசரதனுக்கு.

கருங்குழல் கைகேசிக்குத் தசரதன் வரங்கோடுத்தது, அவள் அழகை மேச்சியல்ல, காமக் களிமயக்கிற்காகவல்ல தேர்ப்பாகனேவனும் திகைத்தோடத்தகுந்த பேரசுரன் பேரும்போரில் தீரமுடன் தேரோட்டித் தந்த வேற்றிக்காகவே வரங்களிரண்டு மன்னவன் வழங்கினன். அன்று மன்னவன் தந்த வரம் வாய்மை யுருவில் வந்து இன்று மன்னவன் மரபுமுறையை மாற்ற முற்படுகின்றது. மரபை விட்டால் வாய்மை நிலேக்கும்; வாய்மையை விட்டால் மரபுநிலேக்கும். இரண்டையுங் காக்கவோ இடமில்லே, ஒன்றையும் விடவோ உளமில்லே. ஏந்தல் என் சேய்வான்?

கைகேசியோ தான்வாங்க நினேத்த வரத்தின் அருமையை நோக்கி மன்னவன் ஒருகால் மறுத்துவிடுவனே எனவும் ஐயுற்ருள், அவள் உறுதிமேல் உறுதி சேய்துகோள்ளத் தலேப்பட்டாள். பண்டு தந்த வரத்தை இன்றளித்தல் வேண்டுமேன்ற அவள், மறுத்துரைக்காமல் தரவேண்டுமேன்ருள். மன்னன் அவள் இராமனிடத்தில் கோண்டிருந்த அன்பின் மிகுதியையே அறிந்தவனுதலால் அவள் நம்புமாறு, உன் மகன் இராமனுணேயாக வழுவாதளிப்பேனேன வற்புறுத்தினன். வரத்தை வலியுறுத்த ஆணேயுங் கேட்டுக்கோண்டபின் அவள் தன் கருத்திற்கோண்ட கடுமையை வேளிக்காட்டினள்,

கலங்கி வீழ்ந்தான் காவலன். அடாது சொல்லிய அவளை அகலாச்சிறை செய்யவும் முறைப்படி இராமனுக்கு அரசைக் குறித்த அன்றே அளிக்கவும் அஞ்சான் அரசன், ஆனால் தங்கள் வழிவழி வந்த வாய்மைச் செல்வம்மாண்டொழியுமே எனவே மயங்கினான் மன்னவன். தங்கள் மரபின்முறையை மதிக்காத அவளை மனைவி கணவன் என்ற மரபில் நின்றும் மாறியவளாகவே மதித்தான். மன்னவர் வணங்கும் மணிமுடி வேந்தன் மனைவியென்றும் எண்ணாமல் அவள் அடிமிசை வீழ்ந்தும் அரற்றினான். ஏன் மரபைக்காக்க. அவள் இரங்க வில்லை. வீழ்ந்தனன் மறுபடி வெம்பி, விடிந்ததுபொழுது மன்னவனை யழைக்கவந்த மந்திரியால் மகனையழைப்பித்தாள் அம்மங்கை. வந்து வணங்கினன். தந்தனள் கானகம். நன்றெனச் சென்றனன். நண்ணினன் வசிட்டன். விளைந்தன அனைத்தையும் வேந்தன்பின் உணர்ந்தனன். ஆறாத் துயரத்தனான அண்ணல் அங்கிலையே பேராப்பெருமையனாக முடிவுகொண்டனன்,

இளமையிலேயே தாடகைவதம் செய்த தாளாளன், பரசு ராமனைப் பங்கமுறச்செய்த பண்ணவன். பதினான்கு ஆண்டுகள் காட்டில் எங்ஙனம் காலங் கழிப்பனெனக் கலங்கவில்லை. கண்மணி காட்டில் கலங்குவனெனக் கருதி யிருந்தால் உறுபடையேந்தித் தானும் உடன் சென்றிருப்பன். எங்கே செல்லினும் எத்தனை யாண்டிருப்பினும் வீரராகவனை வெல்லு வாரில்லையென்பதை உணர்வான் வேந்தர்கள் திலகன். ஆனால் வேந்தனாவானை விரதியாகக் காண நேர்ந்தமைக்கே வேந்தன் விம்மினான்.

துன்றுந்துன்பினும், ஒன்றும் இன்பினும், என்றும் கொள்கையிற் பின்றாத கொற்றவன், முனிவன் இட்ட சாபத்தை முற்றும் பயன்படுத்திக்கொள்ளத் திட்டமிட்டான். "மயிர்நீப்பின் வாழாக் கவரிமாவன்னார் உயிர் நீப்பர் மானம்வரின்" என்பது அறநூல் ஆணை அல்லவா? ஒட்பமுடையான் தன் உயிர் நீத்தற்கே உறுதிகொண்டான். மாதவன் இட்ட சாபம் அன்று மகப்பேறற்ற என்னை மகப்பேறுறச் செய்து உதவிற்று. மானமழியவரும் இன்று பெற்றியில் நீங்காது சிற்றுயிர் நீங்கிச் சிறக்க உறுபடையாக உதவுகிறது என உட்கொண்டான் உணர்வாளன். (தொடரும்)

சென்னை, தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப்பிரசார நிலையம்
' வேளூர் தேவஸ்தான இறைபணி மன்றம் ' (31—12—59)



டாக்டர், சர். சி. பி. இராமசுவாமி ஐயரவர்கள்
சைவசித்தாந்த வகுப்பையும், நூல்நிலையத்தையும் பார்வையிடல்



விழாத் தலைவர், சர். சி. பி. இராமசுவாமி ஐயர் முதலியவர்கட்கு
வைத்தீசுவரன்கோயில் கார்த்திகைப் பிரசாதம் வழங்குதல்

சென்னை, சமயப் பிரசார நிலயத்தின் 6 ஆவது ஆண்டு நிறைவு விழாவில்



விழாத் தலைவர், சர். சி. பி. அவர்கள் தலைமையுரை நிகழ்த்துதல்
(31—12—59)



திரளாகக் குழுமியிருந்த பொதுமக்களில் ஒரு பகுதி (31—12—59)

# பழந்தமிழ் நூல்களில் உயிர் வகைகள்

வித்துவான், திரு. செ. வேங்கடராமச் செட்டியார் அவர்கள்
ஆராய்ச்சி விரிவுரையாளர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்,
அண்ணாமலைநகர்.

(மலர் 19 இதழ் 1 பக்கம் 41 இன் தொடர்ச்சி)

### பல்லி சொல்லின் பயன் பன்றியுமுணர்தல்

ஒரு மலையில் தினைப்புனம் செழித்து வளர்ந்துளது. ஒரு காட்டுப் பன்றி அத்தினைக்கதிரைத் தின்ன எண்ணி அப்புனத்துப் புகுகின்றது. அங்குப் பன்றியைப் பிடிக்கப் பொறி ஒன்று வைக்கப்பட்டுள்ளது. அதனை அறியாது அப்பொறியிலுள்ள சிறு வழியில் நுழையப் போகின்றது. அப்பொழுது பக்கத்தில் பல்லி சொல்லுகின்றது. அச்சொல்லின் ஒலியே தனக்குத் தீமை வருவதை அறிவிக்கின்றது என்று அப்பன்றி அறிந்துகொண்டு மெல்ல மெல்லப் பின் வாங்குகின்றது; படுத்துக்கொள்கின்றது. இச் செய்தியை,

" சிறுகட் பன்றி, ஓங்குமலை வியன்புனம் படீஇயர் வீங்குபொறி
நூழை நுழையும் பொழுதில் தாழாது
பாங்கர்ப் பக்கத்துப் பல்லி பட்டென
மெல்ல மெல்லப் பிறக்கே பெயர்ந்துதன்
கல்லளைப் பள்ளி வதியும் " (நற்றி - 98)

என உக்கிரப் பெருவழுதி உரைத்திருத்தல் காண்க.

தினைக்கதிரை யுண்ணச் சென்ற மற்றொரு பன்றி பல்லியின் சொல்லைத் தன் செவியால் ஓர்ந்து அவ்வொலி நன்மையை அறிவிப்பதென உணர்ந்து தான் விரும்பிய தினைப் புனத்தில் புகுகின்றது.

" செந்தினை ஓங்கு வரைப் பெருங்குரல் உணீஇய பாங்கர்ப்
பகுவாய்ப் பல்லி பாடோர்த்துக் குறுகும் ... பன்றி "
(அகநா - 88)

என ஈழத்துப் பூதன் தேவனார் இயம்பி யிருத்தல் காண்க. இதனால் மக்களைப் போலவே பன்றிகளும் பல்லி சொல்லின் பயனை யுணர்ந்து நடந்துகொண்டமை அறியலாம்.

## 7. அணில்

இது அணிற்பிள்ளை எனவும் வழங்கப் பேறுவதுண்டு. தோல்காப்பியர் இதைக் குறிப்பிடும்போழுது. 'மூவரியணில்' (மரபி - 6) என்று இதன் முதுகில் உள்ள வரிகளை எண்ணிச் சோல்லி யிருக்கின்ருர். பூதப்பாண்டியன் தேவி பெருங்கோப் பேண்டு வேள்ளரிக் காயைக் குறிப்பிடும்போது "அணில் வரிக் கோடுங்காய்" (புறநா - 246) என்று இவ்வணிலையும் இதன் முதுகிலுள்ள வரிகளையும் வேள்ளரிக்காய்க்கு உவமை யாகக் கூறியுள்ளமை காண்க. வேள்ளரிக்காயின் வடிவும் வரியும் அணிலை ஒத்துத் திகழ்வது கண்டு மகிழ்க. கடியலூர் உருத்திரங் கண்ணனுர், வேட்டுவர் குரம்பையில் ஈந்திலை வேய்ந் திருப்பதற்குக் காரணம் கூறுவாராக, "வரிப்புற அணிலோடு கருப்பை ஆடாது" (பேரும்பாண் - 85) என்று கூறியுள்ளார். அணிலின் வரிப்புறம் இப்புலவரையும் கவர்ந் திருத்தல் காண்க. கருப்பை என்றது எலியை. தாழை மடலில் உள்ள முள்ளின் வரிசைக்கு இந்த அணிலின் பல்லை உவமை கூறி மகிழ்கின்ருர் ஒரு புலவர்.

"அணிற் பல்லன்ன கோங்கு முதிர் முண்டகம்" (குறுங் - 307)

என்பது காண்க. காட்டிலுள்ள ஊகம்புல்லின் பூவிற்கு இவ் வணிலின் வாலை உவமை கூறி உவகை கோள்கின்ருர் ஒரு புலவர்.

"வேனல் வரியணில் வாலத் தன்ன
கான ஊகின் கழன்றுகு முதுவீ (புறநா - 307)

என்பது காண்க. ஊகம்புல்லின் முனையிலுள்ள பூங்கற்றை யையும் அணிலின் வாலமைப்பையும் காண்போர்க்கு இவ் வுவமையின் அருமை தேள்ளிதிற் புலனும்.

(தோடரும்)

திறன் ஆய்வு:

# தருமையாதீன வெளியீடுகள்

**வித்துவான், திரு. வி. சா. குருசாமி தேசிகர்**
தமிழ்ப் பேராசிரியர், ஆதீனப் பல்கலைக் கல்லூரி, தருமபுரம்

## எண். 2. நித்யகன்மநெறிக்குறள்.

இயற்றியவர்:- ஸ்ரீசிதம்பரநாதமுனிவர். வெளியிட்டோர்:- 23ஆவது மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக சுவாமிகள் அவர்கள் ஆணையின்படி ஆதீன அடியவர், வித்துவான், ஸ்ரீ சட்டைநாதத் தம்பிரான் சுவாமிகளால் பாரவை யிடப்பட்டுக் கார்பார் ஸ்ரீ இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகளால் வெளியிடப்பெற்றது. முதல் பதிப்பு 1927.

**ஸ்ரீசிதம்பர நாதமுனிவர்:** தருமையாதீனத்துப் பத்தாவது குருமூர்த்திகளாக விளங்கிய ஸ்ரீலஸ்ரீ சிவஞான தேசிக சுவாமிகள் திருவாரூர்த் தியாகேசப் பெருமான் வழிபாட்டிற்கு எழுந்தருளிய காலத்துத் 'திருப்பதிகமாலை' என்ற நூலால் தம் அவாவினை விண்ணப்பித்துத் தருமைத் தலபுராணம், தருமை சச்சிதானந்த விநாயகர் பிள்ளைத்தமிழ் முதலிய நூல்கள் இயற்றிய ஆதீன அடியவர், ஸ்ரீ சங்கரகுமார முனிவரிடம் முதல் துறவுநிலை ஏற்றுப்பின்னர் குருநாதரிடம் சிவஞான உபதேசம் பெற்றவர்கள். தருமையில் ஆசாரிய தரிசன நியமம் பூண்டு விளங்கினார்கள். வடமொழி ஆகமங்களையும் பத்ததிகளையும் ஆராய்ந்து இந்நூலை குறட்பா வடிவில் அருளிச்செய்தார்கள். காலம் கி. பி. 18ஆம் நூற்றாண்டு.

**நித்திய கன்மநெறி:** நாள்தோறும் செய்யவேண்டிய கடமைகளை உணர்த்தும் நூல் என விரியும். 755 குறள் வெண்பாக்களாலாகியது. தியானவிதி முதல் போஜனவிதி யீறாக ஒன்பது பகுப்புடையது. தியானம், அவசிய கருமம் தந்த சுத்தி, நீராடல், அனுட்டானம், சூரிய பூசை, சிவபூசை, சேபம், உணவருந்தல் ஆகிய முறைகளை விரித்துரைப்பது. 'அத்தன் அருள் ஆகமத்தின் ஆராய்ந்து அவாவினிற்செய், நித்திய கன்மநெறி' என முனிவரே காப்புச் செய்யுளில் ஓது தலின் இந்நூல் சிவாகமங்களில் விதித்த நித்திய கருமங்களை விரித்துரைப்பது என்னலாம். சூரியன் உதிக்க ஐந்து நாழிகை முன் துயிலெழுந்து முகம் கை, கால் கழுவி திருநீறணிந்து கடவுளைத் தியானித்துப் பின்னர் தம் கருமம் செய்க என்று கூறுகிறார்

" பூதியணிந்தே புறத்திற் புறப்படுக
பூதியணி யாதொழிந்த போது " — குறள் 6.

" அற்றைக் குபவாசியா யானைந் தினையருந்த
லுற்றே இருநூறு உரை " — குறள் 7.

என்னும் குறள்கள் திருநீறணிதலின் இன்றியமையாமையைத் தெரிவிப்பன. ஊர்ப்புறத்தே ஒதுக்கிடத்தில் சென்று மல சலங்கழித்தல் வேண்டும் என்றும் ஆல், அரசு, நெல்லி, ஆவிரை, சாம்பல், செங்கல், மணல் வேம்பு முதலியவற்றைக்கொண்டு பல் விளக்கினால் தவமழியும் என்றும் மருது, குமிழ், புன்கு, நொச்சி, வாகை, கருங்காலி, நாயுருவி முதலிய மரக்கிளைகளில் பற்கோம்பு ஒடித்து வடக்கு நோக்கியிருந்து பல் துலக்குதல் வேண்டுமென்றும், நீராடல் பூசை, ஓமம் முதலியவற்றை ஈர ஆடை உடுத்திச் செய்தல் நன்று என்றும், நீராடிக் காய்ந்த கோவணம் தரித்து ஆடை உடுத்துக என்றும் பின்னர் அனுட்டானம் செய்தல், சூரியபூசை செய்யும்முறை, சிவபூசை செய்யும்முறை, செபம் செய்யும்முறை ஆகியவற்றைக்கூறி ஆலயம் சென்று கடவுளை வணங்கிப் பின் உணவுண்க என்றும் எப்பொழுதும் எவ்வாறும் உண்ணுமிடம் இலை முதலியன தூய்மையோடிருக்கவேண்டும் என்றும் கூறி முடிகிறது நூல்.

இந்நூலுள், சைவ அநுட்டானவிதி, சிவபூசைவிதி, சூரிய நமஸ்காரம் முதலியவை ஆகமங்களில் சொன்னவாறு அமைக்கப் பட்டுள்ளன.

## எண் 3. திருமுல்லைவாயிற்புராணம்

இயற்றியவர் : சீகாழி திரு. வடுகநாத தேசிகர் அவர்கள்.
வெளியிட்டோர் : 23 ஆவது மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் ஆணையின்படி சீகாழி திரு. ம. அ. முத்துத்தாண்டவராயப் பிள்ளை அவர்கள்.
முதற்பதிப்பு 1927.

திரு. வடுகநாத தேசிகர் : இவர் திருவாரூர் திரு. வைத்தியநாத நாவலரின் நான்காம் புதல்வர். சீகாழியில் வசித்தவர் உலகமறிந்த ஒரு பெருங்கவிஞராய் விளங்கியவர். சென்னையில் துறைசைக் கச்சியப்ப முனிவர் விநாயக புராணம் அரங்கேற்றியபோது அச்சபைக்குத் தலைவராக வீற்றிருந்தார் என்பதால் இவர் தம் கல்வித்திறமையும் ஒழுக்கமும் உயர்ந்தன என அறியலாம். காலம் 18ஆம் நூற்றாண்டு.

திருமுல்லைவாயிற்புராணம்: திருமுல்லைவாயில் தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருக்கோயில்கள் இருபத்தேழனுள்

ஒன்ருய் இலங்குவது. சோழநாட்டுக் காவிரி வடகரைத் தலங்களில் ஒன்று. கடற்றுறையில் அமைந்துள்ள அழகிய திருத்தலம். இது தென்திருமுல்லேவாயில் எனப்படும். வட திருமுல்லேவாயில் என்பது சென்னேக்கருகே விளங்குவது. திருஞானசம்பந்தர் திருப்பதிகம்பெற்ற சிறப்புடையது. சுவாமி: முல்லேவனநாதர். அம்மை : அணிகொண்டகோதை. இத் திருக்கோயிலே (கொகுடி) முல்லேக்கோயில் எனத் தேவாரம் வழங்கும்.

கடவுள் வாழ்த்து, நகர்வளச் சருக்கம், நைமிகச் சருக்கம், அங்கம் இரத்தினமான சருக்கம், பார்வதி பஞ்சாக்கரசித்தி பெற்ற சருக்கம், பரத்தைகதி பெற்ற சருக்கம். தீர்த்த விசேடச் சருக்கம், கருடன்கதிபெற்ற சருக்கம், கிள்ளிச்சோழன் முத்தி பெற்ற சருக்கம் என்ற சருக்கங்களே உடையதாய் 415 திருவிருத்தங்களேக் கொண்டது. நகர்வளச்சருக்கத்தில்

" செங்குவளே வெண்கமலம் செங்கமலங் கருங்குவளே
சேர்ந்து கூடிப்
பொங்குதிரைப் புனற்றடத்துப் பூம்படாம் போர்த்ததெனப்
பொலிந்த காட்சி
சங்குதவழ் முல்லேவனத் தெம்பிரான் திருநயனம்
தம்மில் ஒன்றும்
செங்கதிரை வெண்கதிரைச் செம்பாம்பு கரும்பாம்பு
சேர்த லொக்கும் "

என்னும் பாடல் ஆசிரியர் கற்பனேக்கு ஒரு சிறு சான்ருகும். எளிய நடையில் அரிய கருத்துக்களேச் சேம்போக்காகக் கற்பனே வண்ணம் கூட்டி அரிதின் இயற்றப்பெற்ற புராணம் இந்நூல்.

" தென்மாந்தை வேளாளன் இராக வன்சேய்
வீரப்பன் சிந்தை போலும்
என்மனமும் தழைத் தோங்கி முல்லேவனச்
சரிதை சிறிதியம் பலுற்றேன்
பொன்மகளேப் பொருந்தியமால் மண்மகளேப் பிரிந்தன்னே
புலமை மிக்கோர்
நன்மதியால் பெரான வடுகன் வாய்த்தமி
ழென்ருல் நவை சொல்லாரே. "

என்னும் அவையடக்கச் செய்யுளில், இந்நூலாசிரியர் பெயர் தேசிகர் அவர்களே ஆதரித்த புரவலர் பெயர் முதலிய குறிக்கப் பெற்றுள்ளன.

(தொடரும்)

# செய்திகள்

## கங்கைகொண்டசோழபுரத்தில்

## ஏகதின லட்சார்ச்சனைத் திருநாளும் பட்டமளிப்பு விழாவும்

கங்கைகோண்ட சோழபுரத்தில் ஸ்ரீ பிருகதீஸ்வரர் திருக்கோயிலில் தருமையாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் திருவுள்ளப்படி மாயூரம், ஸ்ரீலஸ்ரீகுருஞான சம்பந்தர் வாரவழிபாட்டுக் குழுவினர் வாரவழிபாடு செய்தார்கள். அவ்வமயம் பெருவுடையார்க்கு மிக்க பொருட் செலவில் சிறந்த முறையில் ஏகதின லட்சார்ச்சனையும், வாரவழிபாடுகளும் நடந்தன. ஸ்ரீ துர்க்காதேவி, நவக்கிரக மூர்த்திகளுக்கு மருந்து சார்த்திக் கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. வழிபாடுகள் சிறப்புற நிகழ்ந்தன. காலை 11 மணி சுமாருக்கு அவ்வாலயத்தின் வடக்குத் திருச்சுற்றில் அமைக்கப்பட்டிருந்த பந்தலில் வழிபாடுகளுக்குப்பின் அன்பர்கள் திரண்டிருந்தார்கள். பனசை, ஆடுதுறைச் சிவனடியார்களும், சுற்றுப்புற ஊர்ப் பெருமக்களும் அங்குக் கூடியிருந்தார்கள். ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் கூட்டத்தினர்க்கு அருளாசி புரிந்து வாழ்த்துரை புரிந்தார்கள். திருப்பனந்தாள் சிவனடியார் திருக்கூட்டச் சார்பில் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானத்தின் திருவடி போற்றித் திருவேகாதசமாலை ஒன்றைத் திரு. வெள்ளை வாரணம் படித்துப் போற்றிச் சமர்ப்பித்தார். வாழ்த்துரைக்குப் பின் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள், திருச்சி மத்திய கோவாப்பரேடிவ் கூட்டுறவு பாங்க் செயலாளரும் சிறந்த அறிஞரும், திருக்குறள் விளக்க உரையாசிரியரும், பெருநிலக் கிழாரும் ஆகிய சைவத்திரு. ஜி. வரதராஜ பிள்ளை B. A. அவர்களுக்கு " திருக்குறள் வேள் " என்ற பட்டம் வழங்கிச் சிறப்பித்து வாழ்த்தினார்கள். அதன் பின் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்து விரிவுரையாளரும், சிறந்த தமிழ்ப்புலவரும், கல்வெட்டுத் துறையில் நற்றொண்டு புரிந்து வருபவருமாகிய வித்துவான், திரு. வை. சுந்தரேச வாண்டையார் அவர்களுக்குக் " கல்வெட்டு ஆராய்ச்சிக் கலைஞர் " என்ற பட்டம் வழங்கிச் சிறப்பித்து வாழ்த்தியருளினார்கள்.

சென்னை, தருமையாதீன சமயப் பிரசாரநிலையம் "ஞான சம்பந்தம்" இதழாசிரியர் வித்துவான், ஒடுக்கம் ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் வரவேற்புரை கூறும்போது, கங்கைகொண்ட சோழபுரத்தின் பெருமை, வழி பாட்டின் சிறப்பு, இறைவன் உயிர்களை ஆட்கொள்ளும்முறைமை முதலியவற்றை விளக்கிக் "கூடலும் குருஞானசம்பந்தரும்" என்ற தலைப்பில் பேசினார்கள். ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகா சந்நிதானம் அவர்களும், ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருணந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களும் திருஞானசம்பந்தரும், அப்பரும் போன்றிருக்கிறார்கள் என்று அழகுற விளக்கிக் கூடற்கும் குருஞானசம்பந்தர்க்கும் உள்ள திருவருள்தொடர்பை விளக்கினார்கள்.

அடுத்துத் திருக்குறள் வேள். ஜி. வரதராஜ பிள்ளை B. A., அவர்கள் "சம்பந்தரும் நின்றசீர் நெடுமாறரும்" என்ற தலைப்பிற் பேசும்போது, தமக்கு ஆசியோடு சிறப்பு அருளிய கயிலைக் குருமணியின் திருவடிகளுக்குத் தம் வணக்கத்தையும் புலப்படுத்தித் திருஞானசம்பந்தர் நின்றசீர் நெடுமாறரை எவ் வாறு திருத்திப் பாண்டிய நாட்டை எவ்வாறு வாழ்வித்தார்கள் என்பதை விளக்கி, அத் திருத்தொண்டால் சைவம் நன்கு விளங்கியதைப் பெரியபுராணங்கொண்டு தெளிவாக்கினார்கள். திருவிசைப்பாப் பாடிய ஆசிரியர்களைப்பற்றிப் பேச முற்பட்ட கல்வெட்டு ஆராய்ச்சிக்கலைஞர் வித்துவான், திரு.வை. சுந்தரேச வாண்டையார் அவாகள் தமக்குப் பல்லாற்றானும் ஆசியருளிப் புரந்து சீரிய பட்டமும் அருளி வாழ்த்துரை வழங்கிய குருநாதர் திருவடிகளுக்கு வணக்கம் செலுத்திப் பின், கண்டராதித்தர், கருவூர்த்தேவர் ஆகிய அருளாளர்களைப் பற்றிய வரலாற்றுக் குறிப்புக்களை விளக்கிக் கல்வெட்டு நுட்பங்களைப்பற்றிப் பல குறிப்புக்களைத் தந்து தம் பேச்சை நிறைவு செய்த பின், தருமை யாதீனப் பல்கலைக் கல்லூரி முதல்வர், முதுபெரும் புலவர், வித்துவான், திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியார் அவர்கள் "தருமையும் குமரகுருபரரும்" என்ற தலைப்பிற் பேசினார்கள். அவர்கள் தம் பேச்சில் குமரகுருபரர் தருமைக் குருமூர்த்திகளிடம் அருளுபதேசம் பெற்றவாற்றையும் தருமைப் பண்டார மும்மணிக்கோவையின் பா நலன்கள் சிறந்திருக்கும் செம்மையையும். தருமைக் குமரகுருபரர் வழியே பனசைக் காசிமடம் எழுந்தோங்கி இலங்குமாற்றையும், குமரகுருபரரால்

தமிழுலகும், சமயவுலகும் பெற்ற பெரும் பயன்கள் இன்ன என்பவைகளேயும் குறிப்பிட்டார்கள். ''அப்பரும் பல்லவனும்'' என்ற தலைப்பில் தருமையாதீனப் பல்கலைக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் வித்துவான், திரு சோ. சிங்காரவேலனுர் பேசுகையில், கங்கைகொண்ட சோழபுரம் தருமையாதீனம் குருமணியின் தண்ணருளால் இன்று கயிலைகண்ட சோழபுரம் ஆயிற்றென்றும் பல்லவன் சுடச்சுட ஒளிரும் பொன்போல் அப்பர் உண்மை ஒளி பிறங்கிற்றென்றும், அப்பர் காலத்திலே வாழ்ந்த பல்லவன் என்றே வழங்கவேண்டுமென்றும், சாக்கிரடீஸ் நஞ்சுண்டு அமையவில்லை என்றும் அமைந்தவர் அப்பரேஎன்றும் விளக்கிப் பேசினுர். தருமையாதீனம், திரு. ஆர். வேலாயுத ஓதுவாமூர்த்திகள் 'கங்கைகொண்டசோழன்'' கதாகாலட்சேபம் செய்தார்கள். திருக்கோயில் நிர்வாக அதிகாரி ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்களை வரவேற்று உபசரித்து வழிபாடுகளின் போது உடனிருந்தார்.

மாலையில், மாயூரம் வார வழிபாட்டுக் குழுவினர் செயற் குழுக் கூட்டம் திருக்கோயில் அலுவலகக் கட்டிடத்தில் கூடிய போது ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருணந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் போந்திருந்து பேசும்போது, தருமையாதீனத் திருக் கோயில்களின் நிர்வாகத்தைப் பாராட்டிக். கங்கைகொண்ட சோளேச்சரர் திருக்கோயிலில் அச்சோழனே கண்டிராதநிலையில் அத்துணைச் சிறப்பாக அபிஷேக ஆராதனைகள் நிகழ்த்திய கயிலைக் குருமணியின் திருவடிகளை உரியமரபிற் போற்றி, அத் திருக்கோயில் போதுமான பொருளாதாரநிலையில் இல்லாது நன்கு புரப்பார் இன்றி விளங்குவதால் அதனைத் தருமையாதீனக் கோயில்களுள் ஒன்ருக ஆக்குமாறு அரசியலாரைக் கேட்டுக் கொண்டு ஆதீனக் கோயில்களுள் ஒன்ருக இதனை ஏற்றுப் புரக்கும் பேரருளுடைமை கயிலைக் குருமணியின் திருவடிகட்கு உண்டு என்று நம்பிக்கை தெரிவித்து அன்பர்கள் கோரிக்கை அந்நிலையைப் பெருவுடையார் கோயிலுக்கு அச் சீரிய நிலையை விளைக்கும் என்று தாம் கருதுவதாக உரைத்தார்கள். வந்திருந் தோரனைவர்க்கும்மகாப்ரசாதம்துணிப்பையில்இட்டுக் கொடுக்கப் பெற்றது. வழிபாடுகளை முடித்துக்கொண்டு ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் ஏனைய அன்பர்களோடு தருமையாதீனத்திற்கு எழுந்தருளினுர்கள்.

## குத்தாலம் ஸ்ரீ உக்தவேதீசுவரசுவாமி திருக்கோயில் மகாகும்பாபிஷேகம்

தருமையாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் அருளாட்சிக்காலத்தில் ஆங்காங்கு ஆதீனத்துக்குச் சொந்தமான திருக்கோயில்களில் நிகழ்த்திவரும் மகாகும்பாபிஷேகங்களில் குத்தாலம் ஸ்ரீ உக்தவேதீசுவரசுவாமி திருக்கோயில் மகாகும்பாபிஷேகம் குறிப்பிடத்தகுந்த ஒன்றாகும். ஏனெனில், கயிலாய யாத்திரைக்குப்பின் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குரு மகாசந்நிதானத்தில் செய்வித்தருளும் முதல் கும்பாபிஷேகம் இது. கும்பாபிஷேகத்திற்கு மூன்று நாட்கள் முன்பிருந்தே தமிழ்வேத, வடமொழிவேத பாராயணங்கள் தொடர்ந்து நடைபெற்று வந்தன. தருமையாதீனப் பல்கலைக்கல்லூரி ஆசிரியர் & மாணவர்களால் பன்னிரு திருறைப் பாராயணம் நிகழ்ந்தது. தில்லைத் திருமுறைக் கழகத்தினரின் பன்னிரு திருமுறைப் பாராயணமும் சிறப்புற நிகழ்ந்தது. யாகசாலைகள் மிகச் சிறந்த முறையில் திகழ்ந்தன. சொற்பொழிவுகள் நடைபெற்று வந்தன. ஏற்பாடுகள் மிகவேகமாக நடைபெற்றன.

31-1-60 அன்று காலை 10-30க்கு பரிவார கும்பாபிஷேகம் சிறப்புற நிகழ்ந்தது. 1—2—60 அன்று காலை 10-30க்குமேல் ஸ்ரீ உக்தவேதீசுவரசுவாமி தேவஸ்தான கும்பாபிஷேகம் சிறப்புற நிகழ்ந்தது. அன்று ஸ்ரீ உக்தவேதீசுவர சுவாமிக்கு மகாபிஷேகமும், ஏகதின லட்சார்ச்சனையும், அம்பாளுக்கு நவசக்தி அர்ச்சனையும் நடைபெற்றன்.

30—1—60 சனிக்கிழமை யன்று மாலை தருமை ஆதீனப் பல்கலைக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் வித்துவான், திரு. வி. சா. குருசாமி தேசிகர் அவர்கள் " உளங்குளிர்ந்த ஒபாதெலாமுகந்துகந்துரைப்பனே " என்ற பொருள் பற்றியும், தருமை ஆதீனப் பல்கலைக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் வித்துவான் திரு. ம. சிவசம்பு அவர்கள் " திருத்துருத்தியும் திருவேள்விக் குடியும் " என்ற பொருள்பற்றியும், ஆதீன ஓதுவார் திரு. சம்பந்த முதலியார் அவர்கள் " காண்பரிய துருத்தியஞ்சுடர் " என்ற பொருள்பற்றியும் விரிவுரையாற்றினர்.

31—1—60 ஞாயிற்றுக்கிழமை மாலை தருமையாதீனப் பல்கலைக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் வித்துவான்,

சிரோமணி திரு. வி. சபேசன் அவர்கள் "நெஞ்சுள் இறைவனை எப்போதும் ஏத்துமின்" என்பது பற்றிப் பேசினர்.

1—2—60 அன்று மாலை தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி முதல்வர் முதுபெரும் புலவர். திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியார் அவர்கள் "சொன்னவாறு அறிவார்" என்ற தலைப்பிலும், தருமையாதீனப் பல்கலைக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் வித்துவான், திரு. சோ. சிங்காரவேலனுர் "திருத்துருத்தியான் பாதம் சேர்" என்ற தலைப்பிலும் பேசினுர்கள்.

## ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்களுக்கு வரவேற்பு

1—2—60 மாலை 7-30 மணிக்கு குத்தாலம் நகரப்பெருமக்களும், நல்லன்பர்களும் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்களது கயிலாய யாத்திரையை முன்னிட்டுப் போற்றி ஒரு பாராட்டுவிழா நடத்தினர். கூட்டத்தில் பெருமக்கள் பலரும் திரண்டிருந்தார்கள். திருவாளர்கள் ரேங்கசாமி ரெட்டியார், நாராயணசாமி செட்டியார், சிங்காரம் செட்டியார் முதலிய நகரப் பெருமக்கள் கோபுரவாயிலிலேயே ஸ்ரீலஸ்ரீ கயிலைக குருமணியை வரவேற்றுப் பிரசார மண்டபத்துக்கு அழைத்து வந்தார்கள். வழிபாட்டுக்குப்பின் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்கள் திருமுன் திரு. நாராயணசாமி செட்டியார் அவர்களும், திரு. ஆனந்தன் அவர்களும், திரு. குஞ்சிதபாதம் பிள்ளை அவர்களும் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்களின் திருவடிகளைப் போற்றி வரவேற்பிதழ்களை நகரப் பஞ்சாயத்தார் சார்பிலும், பெருமக்கள் சார்பிலும், நூலகச் சார்பிலும் வாசித்துச் சமர்ப்பித்துக் கொண்டார்கள். பிறகு, அஞ்சாரு வாரத்தலை திருவாளர் ரேங்கசாமி ரெட்டியார் அவர்கள், ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானமவர்கள் புரிந்தருளிய கயிலை யாத்திரையைப் பாராட்டி, அவர்கள் நிர்வகித்துவரும் திருக்கோயில்களைப்பற்றிக் குறிப்பிட்டு அவை தூய்மை நிரம்பியனவாய் விளங்குவதைக் கூறி, அப்பர் சுவாமிகளுக்கே கிடைக்காத வடகயிலாயக் காட்சி நம் குருமணியவர்களுக்கே கிடைத்தது என்று கூறி பல்லாயிரக் கணக்கான ரூபாய்களைச் செலவிட்டுச் செய்யும் தம் நகரக் கும்பாபிஷேகத் திருநாளில்

வரவேற்பது பெரும் பாக்கியம் என்று கூறி ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானத்தின் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்தார்கள், பிறகு ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்கள். கூட்ட நிறைவில் சென்னை தருமையாதீன சமய பிரசார நிலையம் வித்துவான், ஒடுக்கம், ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் அனைவர்க்கும் ஆதீனச் சார்பில் நன்றி தெரிவித்துக் கொண்டார்கள்.

இரவு பஞ்சமூர்த்தி திருவுலாக் காட்சி; கிளாரினட் விருந்து பொய்க்கால் குதிரை யாட்டம் முதலியன சிறப்புற நிகழ்ந்தன.

## தருமபுரத்தில்
## திருக்கயிலாயத் திருவுருவப் படப்பிரதிஷ்டை

தருமையாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் திருக்கயிலாய தரிசனம் செய்து வந்ததின் நினைவாக 14—1—60. வியாழக்கிழமை இரவு ஸ்ரீ ஞானபுரீஸ்வரர் ஆலயத்திலிருந்து திருமுறைப் பாராயணம், நாதஸ்வர இன்னிசை முதலியவற்றோடு திருக்கயிலாய படத்தை எழுந்தருளச் செய்து பண்டாரக்கட்டில் ப்பிரதிஷ்டை செய்யப்பெற்றது. பின்னர் படத்திற்கு ஆராதனைகள் செய்யப்பெற்றது. இவ் வழிபாட்டிற்கு மாயூரம் முதலிய இடங்களிலிருந்து அன்பர்கள் பலர் வந்து வழிபட்டனர். அன்று ஸ்ரீ ஞானபுரீசுவரர் ஆலயத்தில் விசேஷ வழிபாடும் நிகழ்ந்தது.

## தருமை ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்தர்
## வாரவழிபாட்டுக் கழகம்

தருமையாதீனம் ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயிலில் 7—2—60 ஞாயிற்றுக்கிழமை இரவு மாயூரம், தருமை ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்தர் வார வழிபாட்டுக் கழகத்தின் மூன்றாவது கூட்டம் மிக்க சிறப்போடு நிகழ்ந்தது. மாயூரத்திலிருந்து வழிபாட்டுக் குழுவினர் பலர் வந்து வழிபட்டனர். ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானமவர்களும் வழிபாட்டுக்கு எழுந்தருளினார்கள். விநாயகர் முதலிய ஒவ்வொரு சந்நிதியிலும் முறையாக வழிபாடு செய்யப்பெற்றது. பின்னர் திருவாசகம் சிவபுராணம்

பாராயணத்துடன் ஸ்ரீ துர்க்காம்பிகை ஆலயத்தை வழிபட்டுத் திருநெறிய தெய்வத் தமிழ் மன்றத்திற்கு வழிபாட்டுக் குழுவினர் வந்து சேர்ந்தனர். ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் மூன்றாவது வார வழிபாட்டுக் கழகக் கூட்டத்தின் தொடக்கவுரையாக ஆசியருளினார்கள். பின்னர் வார வழிபாட்டுக் கழகத் தலைவர், திரு. B. திருஞானம் பிள்ளை B. A., B. L., அவர்கள் 'உயிர்கள் உய்ய வழிபாடுஇன்றியமையாதது. ஆதலால் வழிபாட்டுக் கழகத்தில் எல்லோரும் உறுப்பினர்களாகச் சேர்ந்து வழிபாட்டைச் சிறந்த முறையில் செய்யவேண்டும்' என்று கேட்டுக்கொண்டார்கள். பின்னர் வித்துவான், ஸ்ரீமத். இராம லிங்கத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் நன்றி நவின்றார்கள். திரு கிருஷ்ணமூர்த்திப்பிள்ளை அவர்கள் இத் தருமை ஆதீனம் ஆதி குருமூர்த்திகள் பெயரால் தொடங்கிய இக்கழகம் சிறந்த முறையில் பணியாற்றுவதற்கான நல நிமித்தங்களோடு தொடங்கப் பெற்றிருக்கின்றது என்பது முதலிய பல சிறந்த கருத்துக்களைக் கூறி அடுத்த வாரம் வழிபாடு மாயூரம் குமரக் கட்டளை ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி தேவஸ்தானத்தில் நடை பெறும் என்றும் அறிவித்தார்கள்.

## திருபுவனத்தில் லக்ஷார்ச்சனை பூர்த்தி விழா

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்துக்குச் சொந்த மான திருபுவனம் ஸ்ரீ கம்பகரேசுவரசுவாமி தேவஸ்தானத்தில் 17—1—60 ஞாயிற்றுக்கிழமை தருமையாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் அருளால் ஸ்ரீ சரபமூர்த்திக்கு 20—12—59 ஞாயிற்றுக்கிழமை, முதல் நிகழ்ந்த லக்ஷார்ச்சனை பூர்த்தி விழாவும், விசேஷ அபிஷேக ஆராதனைகளும், சந்தனக்காப்பு அலங்காரமும் மிக்க சிறப்பாக நடைபெற்றன. கும்பகோணம், மாயூரம் முதலிய இடங்களில் இருந்து அன்பர்கள் பலர் வந்து தரிசித்தனர். ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடாற்றி அன்பர்களுக்கு ஸ்ரீ சரபமூர்த்தி பிரசாதம் அடங்கிய துணிப் பைகளை வழங்கியருளினார்கள்.

அன்று மாலை 6 மணிமுதல் ஆதீனப் பல்கலைக் கல்லூரிப் பேராசிரியர்கள் வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர்,

'திருபுவனத் தலவரலாறு' என்ற தலைப்பிலும், சிரோமணி வித்துவான், திரு. வி. சபேசன், 'திருபுவனமும் வழிபட்டோரும்' என்ற தலைப்பிலும் சொற்பொழிவாற்றினார்கள். ஸ்ரீ சரபமூர்த்தி யின் வரலாற்றை ஆதீனத் தேவார பாடசாலைத் தலைமையாசிரியர் திரு. R. வேலாயுத ஓதுவாமூர்த்திகள் கதாகாலக்ஷேபமாக நிகழ்த்தினார்கள்.

## வேளூரில் தைச்செவ்வாய்த் திருவிழா

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்துக்குச் சொந்த மான வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானத்தில் ஸ்ரீ செல்வமுத்துக்குமாரசுவாமி தைச்செவ்வாய் திருவிழா 31—1—60 ஞாயிற்றுக்கிழமை முதல் தொடங்கி 9—2—60 செவ்வாய்கிழமை முடிய உள்ள நாட்களில் மிக்க சிறப்பாக நடைபெற்றது. விழா நாட்களில் ஒவ்வொரு நாளும் சமயப் பிரசார மண்டபத்தில் மாலை 6-மணிக்கு அறிஞர்களின் சமயச் சொற்பொழிகளும், கதாகாலக்ஷேபங்களும் நிகழ்ந்தன. அன்பர்கள் வந்து கண்டும் கேட்டும் உய்ந்தனர்.

## சென்னை, சமயப்பிரசார நிலையத்தில்
## மாதந்தர சமயப் பிரசார வழிபாட்டுக் கூட்டம்

ஒவ்வொரு ஆங்கில மாதத்திலும் முதல் ஞாயிறன்று நடை பெற்றுவரும் சென்னை, தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப் பிரசார நிலையத்தின் "வேளூர் தேவஸ்தான இறைபணி மன்றம்" மாதாந்தர சமயப் பிரசார வழிபாட்டுக் கூட்டம் 1960 பிப்ரவரி மாதம் 7 ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் 12 மணி வரை திருக்கழுக்குன்றத்தில் நடைபெற்றது.

சென்னைத் திருவாளர்களான, ச. சச்சிதானந்தம் பிள்ளை B. A., L. T., K. வச்சிரவேல் முதலியார் B. A., L. T., A. V. ஆவுடைநாயகம் பிள்ளை B. A , B. L., M. A. சுப்பிரமணிய முதலியார் V. M. கடிகாசலம் J. P., N. சங்கரன் M.A., L.T. J. P., T. S. நாராயணசாமி ஐயர் B A., B.L., மேயர்கம்பெனி R. மாசிலாமணி முதலியார், சாரதி பிலிம் மானேஜர் இராமமூர்த்தி ஐயர், N. R. முருகவேள் M.A., M.O.L., ச. சிவகுமாரன் M. A., B. சொக்கலிங்கம் முதலியவர்களும், இராயப்பேட்டை பால சுப்பிரமணிய பக்தஜன சபை, சைவ சித்தாந்த மகா சமாஜம், இராயபுரம் இறைபணிக் கழகம் முதலிய சபையினரும் விழாவில் கலந்து கொண்டனர்.

# எதிர்காலம்

ஜோதிஷார்ணவம், பிர்மஸ்ரீ. கே. முத்துஜோதிடர் அவர்கள்,
திருவிடைமருதூர்.

( விகாரிஸு மாசிமீ 1உ முதல் 30உ முடிய )
( 13—2—60 முதல் 13—3—60 முடிய )

1. மேஷம். அசுவதி - பரணி - கார்த்திகை ¼

அசுவதி நான்கு பாதங்களும், பரணி 1, 2 பாதங்களும் சுபம் தரும் இல்லறம் ஓங்கும். இடம் மாறி லாபமுண்டாகும். பரணி 3, 4 பாதங்கள் மிசிர பலனைத் தரும். கார்த்திகை முதல்பாதம் வியாதி பயத்தையும், கலவரத்தையும், நஷ்டத்தையும் உண்டுபண்ணும். புதன், வியாழன் சுபமாகும்.

2. விருஷபம். கார்த்திகை ¾, ரோஹிணி - மிருகசீரிஷம் ½

விருஷப ராசி 9 பாதங்களும் மிசிர பலனைத் தரும். சஞ்சாரத்தில் லாபம் ஏற்படும். இடம்மாறி உத்தியோக லாபம் உண்டாகும். மேலோர், பெரியோர் ஆசீர்வாத பலத்தால் கஷ்டங்கள்விலகி சுபமுண்டாகும் கீர்த்தி பத்திரம் கிடைக்கும், திங்கள், செவ்வாய் சுபமாகும்.

3. மிதுனம். மிருகசீரிஷம் ½, திருவாதிரை - புனர்பூசம் ¾

மிருகசீரிஷம் 3, 4 பாதங்கள் உத்தியோக உயர்வைத் தரும். நஷ்டமான பொருள் வரத்து ஏற்படச்செய்யும். திருவாதிரை நான்கு பாதங்களும் கிரஹணம் பிடித்த சந்திரன் கிரஹணம் விட்ட பிறகு பிரகாசிப்பதுபோல பிரகாசிக்கச் செய்யும். துக்கம் நீங்கும். புனர்பூசம் 1, 2, 3 பாதங்களும் ஆரோக்கியத்தைத் தரும். சத்துருபாதை நீங்கச்செய்யும். ஜயம் உண்டாகும். தெய்வபலம் தோன்றி சகல துக்கங்களும் நீங்கி சுபமுண்டாகும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

4. கடகம். புனர்பூசம் ¼, பூசம் - ஆயில்யம்

புனர்பூசம் நான்காம் பாதமும், பூசம் 1, 2 பாதங்களும் மகாவிபத்திலிருந்து விடுவிக்கச்செய்யும். வித்யா விருத்தி, வாகன விருத்தி, உத்தியோக விருத்தி, குடும்ப சுகம் இவைகள் ஓங்கச்செய்யும். பூசம் 3, 4 பாதங்கள் மிசிர பலனைத் தரும்.

ஆயில்யம் நான்கு பாதங்களும் என்றும் கண்டிராத சுகத்தைத் தரும். தெய்வம் முன் நின்றுகாக்கும். உலகப்பிரசித்தி ஏற்படும். வெள்ளி, சனி சுபமாகும்.

## 5. சிம்மம். மகம் - பூரம் - உத்திரம் $\frac{1}{4}$

மகம் நான்கு பாதங்களும் உத்தியோக உயர்வையும், மேலோர், பெரியோர் அன்பையும் தரும். பூரம் நான்கு பாதங்களும் ஆரோக்கியக் குறைவையும், வரவுக்கு மிஞ்சின செலவையும் தரும். உத்திரம் முதல் பாதம் ராஜபோகங்களையும், இல்லற சுகவாழ்வையும், தன தான்யப் பெருக்கத்தையும், கட்டிட லாபத்தையும் தரும். புதன், வியாழன் சுபமாகும்.

## 6. கன்னி. உத்திரம் $\frac{3}{4}$, ஹஸ்தம் - சித்திரை $\frac{1}{2}$

உத்திரம் 2, 3, 4 பாதங்களும், ஹஸ்தம் நான்கு பாதங்களும் சுபமாகும். தெய்வபலம் பூர்ணமாய் இருக்கும். அசாத்தியமெல்லாம் சுலப சாத்தியமாகும். தன தான்ய விருத்தியும், சதா சஞ்சார பலனையும் தரும. மத்தியில் சுவல்ப்பமாக சரீர பீடை காட்டி விலகச்செய்யும். சித்திரை 1, 2 பாதங்கள் கிரய விக்ரங்களையும், லாபத்தையும், குடும்ப சுகத்தையும், புத்திராதிகளின் மேன்மையையும் தரும். காரியசித்தி ஏற்படும்.. புதன், வியாழன் சுபமாகும,

## 7. துலாம. சித்திரை $\frac{1}{2}$, சுவாதி - விசாகம் $\frac{3}{4}$

சித்திரை 3, 4 பாதங்கள் சுபமிராது. பலவிதத்திலும் கவலையைத் தரும். சுவாதி நான்கு பாதங்களும் தெய்வீகத் தன்மையோடு விளங்கும். அசாத்தியமெல்லாம் சுலப சாத்தியமாகும். நஷ்டமான பொருள் வந்துசேரும். விசாகம் 1, 2, 3 பாதங்கள் தூர பிரயாணத்தைத் தரும். உத்தியோக உயர்வைத் தரும். வியாபாரம் ஓங்கும். தன தான்ய விருத்தியாகும். செவ்வாய், புதன் சுபமாகும்.

## 8. விருச்சிகம். விசாகம் $\frac{1}{4}$, அனுஷம் - கேட்டை.

விருச்சிக ராசி ஒன்பது பாதங்களும் சுபமாக நடக்கும். மேலோர், பெரியோர் அன்பையும் பந்து மித்திரர்களின் சேர்க்கையையும், நூதன வஸ்திராபரணச் சேர்க்கையையும், இல்லறசுகத்தையும் தரும். ஆரோக்கியமுண்டாகும். புதன், வெள்ளி சுபமாகும்.

**9. தனுசு. மூலம் - பூராடம் - உத்திராடம் $\frac{1}{4}$**

மூலம் நான்கு பாதங்களும் சஞ்சலம் நீங்கின இல்லறம் தரும். சுபமுண்டாகும். பூராடம் நான்கு பாதங்களும், உத்திராடம் முதல் பாதமும் கிரய விக்கிரயங்களால் லாபத்தைத் தந்து சந்தோஷமுண்டாகும். கடன், ரோகம், சத்ருபாதைகள் நீங்கும். கிரக சுகமுண்டாகும். நூதனவஸ்திராபரணச்சேர்க்கையும் உண்டுபண்ணும். ஞாயிறு, வெள்ளி சுபமாகும்.

**10. மகரம். உத்திராடம் $\frac{3}{4}$, திருவோணம் - அவிட்டம். $\frac{1}{2}$**

மகர ராசி ஒன்பது பாதங்களும் சஞ்சாரத்தால் சுப பலனையும், லாபத்தையும் தரும். மேலோர், பெரியோர் அன்பு கிட்டும். உத்தியோகம் ஓங்கும். எதிர்பாராத சில நன்மைகளையும் ஏற்படச் செய்யும். ஆரோக்கியமுண்டாகும். திங்கள், புதன் சுபமாகும்.

**11. கும்பம். அவிட்டம் $\frac{1}{2}$, சதயம் - பூரட்டாதி $\frac{3}{4}$**

கும்பராசி 9 பாதங்களும் சுபமேயாகும். ஸ்தாவர ஜங்கம சொத்துக்களும், கிரய விக்ரயங்கள் ஏற்படச் செய்யும். எதிர்பாராத லாபம் ஏற்படும். சதா சஞ்சார பலனுகவே இருக்கச் செய்யும் ஞாயிறு, வெள்ளி சுபமாகும்.

**12. மீனம். பூரட்டாதி $\frac{1}{4}$, உத்திரட்டாதி - ரேவதி.**

மீன ராசி ஒன்பது பாதங்களும், விசேஷ லாபத்தையும், நஷ்டமான பொருள் வரத்தையும் தந்து, இடம் மாறி சுப சந்தோஷங்களை உண்டுபண்ணும். கீர்த்தி பத்திரம் கிடைக்கச் செய்யும். உத்தியோகஉயர்வையும், ஆரோக்கியத்தையும் உண்டு பண்ணும். கிரக சுகம் ஓங்கும். ரிணரோக சத்ருபாதைகள் நீங்கும். சதா தெய்வ சிந்தனையைத் தரும். சனி, ஞாயிறு சுபமாகும்.

குறிப்பு :- ஷை மாதம் தான்யங்கள் விருத்தியாகி விலைவாசிகள் குறையும். தன தான்யப் பெருக்கு ஏற்படும். தென் தேசம் ஓங்கும். எங்கும் ஆஸ்தீக புத்தியும், தரும புத்தியும் ஓங்கும். பிரஜைகள் நல்வாழ்வாக, தெய்வ நம்பிக்கையுடன் வாழ்வார்கள். சஜ்ஜனங்களின் தெய்வ பலத்தால், நாஸ்தீகர்களும், துஷ்டர்களும் நசிப்பார்கள். உலகில் தெய்வபலம் ஓங்கி நிற்கும்.

பிற்சேர்க்கை

உ

குருபாதம்

தருமை ஆதீனம் திருநெறிய தெய்வத் தமிழ் மன்றத்தில்

**மாயூரம் ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்தர் வார வழிபாட்டுக் கழகத்தாரது**

3 ஆவது வார வழிபாட்டுக் கூட்டத்தில்

தருமையாதீனம் இருபத்தைந்தாவது

## ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள்

அருளிய

# வாழ்த்துரை

7—2—60

" சீரணியும் நுதலின்விழி மழுமான் நாகம்
திருந்தும்எரி பொருந்துவிடம் தெரிந்திடாமல்
தாரணியன் பரையாள அவர்போல் வந்த
சைவசிகாமணி எவர்க்கும் தலைவன் எங்கோன்
காரணியும் நெடியபொழிற் கமலை வேந்தன்
கருணைமழை பொழியும் இரு கடைக்கணுளன்
பார்புகழும் ஞானசம் பந்தன் எந்தை
பரமன்இரு சரணமலர் பரவி வாழ்வாம் "

" சித்தி தருநாதன் தென்கமலை வாழ்நாதன்
பத்தி தரு நாதன் பரநாதன் — முத்திப்
பெருநாதன் ஞானப் பிரகாசன் உண்மை
தருநாதன் நங்குருநா தன் "

சைவப் பெருமக்களே !

இன்று வாழ்விலே ஒரு திருப்பம் - ஒரு மறுமலர்ச்சி உண்டாகி இருக்கிறது. ஏனென்றால் இன்றைய வழிபாடு அவ்வளவு சிறப்புடையதாக இருக்கிறது. வழிபாட்டைச் சைவன் எவ்வாறு செய்யவேண்டும் என்று குருஞானசம்பந்தப் பெருமான் திருவடிதொழுது நின்று ஒன்றிரண்டு சொல்ல முற்படுகின்றோம். காலம் கடந்துவிட்டது. அன்பர்கள் தொகை சிறிதாயிற்றே என்று கவலைப்படவேண்டியதில்லை. ஏனென்றால் ஒன்றிலிருந்து தானே பல வந்தது! பலவற்றிலிருந்து ஒன்று வரவில்லையல்லவா? ''ஒன்றாய் அரும்பிப் பலவாய் விரிந்து இவ்வுலகமெல்லாம் நின்றாள்'' - யார்? அபிராமி. ஆதலால் சிலர்தான் இருக்கிறோம் என்ற எண்ணம் அவசியம் இல்லை. வார வழிபாட்டிற் சிலர்தான் உள்ளார்கள் என்றாலும் செவி வழியாக உள்ளத்தில் தேக்கிச் சிவ நாமத்தை முழங்கவேண்டும். அத்தகைய உண்மையான வழிபாட்டால்தான் மனிதன் மனிதனாக முடியும்.

இவ்வார வழிபாட்டுக் கூட்டம் மாயூரத்தில் நடக்க வேண்டியது; தருமையில் நடப்பது ஒரு சுபசூசகமாக - அறிகுறியாகவே உள்ளது. குருஞானசம்பந்தப் பெருமான் திருவருள் நம்மை இவ்விதம் ஆட்கொண்டதென்றே கூறவேண்டும். அப்பெருமான் திருவடிக்கு மனம், மொழி, மெய்களாலாகிய வணக்கத்தைச் சேர்ப்பிக்கவேண்டும். அதற்கும் அப்பெருமான் அருள் துணை வேண்டும். ''அவனருளாலே அவன்றாள் வணங்கி'' என்பது அல்லவா மணிவாசகர் மணிமொழி? ஆலய வழிபாட்டைச் செய்யும்போது நிசப்தமாக இருந்து வழிபட வேண்டும். ஏனென்றால் குறிக்கொள் மிகப்பெரியதல்லவா? உலகெலாம் படைத்துக் காத்தழிக்கும் பரம்பொருள் முன் வழிபாடு நிகழ்த்தும்போது ஆரவாரம் புரியலாமா? சாதாரணமாக உலகியலில் ஒரு பெரியவர் முன்பு இருக்கும் அமைதியைவிட எவ்வளவு மடங்கு அது அதிகமாக இருக்கவேண்டும்! எண்ணிப் பாருங்கள். ''அஞ்சினை ஒன்றிநின்று அலர் கொண்டடி சேர்வரியா வஞ்சனை என் மனமே......நொடித்தான் மலைஉத்தமனே'' என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாடுகிறார்கள். எப்படி வழிபட வேண்டும்? ''அஞ்சினை ஒன்றி நின்று'' வழிபடவேண்டும்.

ஆண்டவனிடம் ஐம்புலன்களும் ஒன்றிநின்று வழிபடவேண்டும். அவ்வாறு ஒடுங்கி நின்று வழிபாடு செய்வதனாலேயே அவனருள் துணைக்கூடும். அவ்வாறு ஒடுங்குவதற்கும் கருவிவேண்டாமா? அதுதான் வழிபாடு.

கோயிலுக்குப் போனால் உலகியற் செய்திகளைப்பற்றி எண்ணவும் கூடாது. கோபுரவாயிலுக்கு அப்பாலேயே அவற்றை மூட்டைகட்டி வைத்துவிட்டே உட்புக வேண்டும்.

" சிவ " என்ற சொல்லைத் தவிர வேறு எதுவும் நம் வாயிலிருந்து வெளிவரக் கூடாது. காசிவாசி சுவாமிகள் - இப்போது இருக்கும் குமரகுருபரர் கையெழுத்துக்கூட " சிவ சிவ " என்றே போடுவதை நினைவு கூர்ந்து கொள்ளுங்கள். திருமூலர் திருமந்திரத்தில் இம் மந்திரப் பெருமையை அருளுகின்றார்கள்.

" சிவசிவ என்கிலர் தீவினையாளர்
சிவசிவ என்றிடத் தீவினைமாளும்
சிவசிவ என்றிடத் தேவருமாவர்
சிவசிவ என்றிடச் சிவகதிதானே "

இவ்வாறு இம்மந்திரமன்றி வேறொன்றும் பேசக்கூடாது. சுந்தரர் சிதம்பரத்தில் வழிபட்ட நிலைமையைப் பன்னிரண்டாம் திருமுறையில் சேக்கிழார் கூறுகின்ற பாடலை இங்கு ஒப்பிட்டுப் பார்த்தல்வேண்டும், " அஞ்சினை ஒன்றிநின்று " என்ற தொடர்க்கு விளக்கமாக " ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள " என்கிறார்கள். முக்கரணங்களும் சிந்தையேயாயின என்கிறார்கள். இராஜசம் தமோகுணம், சாத்துவிகம் என்ற மூன்றும் சாத்துவிகமே ஆகிவிட்டன என்றார்கள். அங்கே " திருந்து சாத்துவிகம் " என்ற நயத்தை உணர்தல் வேண்டும். அவ்வாறு நின்று இளம்பிறை யணிந்து ஆடும் சிற்றம்பலத்தான் ஆடும் கூத்தே சிறந்த கூத்து; பெருங்கூத்து என்பது பட " தனிப் பெருங்கூத்து " என்கிறார்கள். அதனால் என்ன வந்தது? பேரின்ப வெள்ளம் கரைபுரண்டு வந்தது என்கிறார்கள். அதிலே திளைத்த சுந்தரர் மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்தார் என்று தரிசனக் காட்சியைச்

சேக்கிழார் சுவாமிகள் அருளுகின்றார்கள், அந்தப் பாடலை இவ்வார வழிபாட்டினர் நன்கு மனத்தில் இருத்திக் கொள்ளுதல் வேண்டும். பாடலைப் பாருங்கள் :

" ஐந்துபேரறிவும் கண்களே கொள்ள அளப்பருங்கரணங்கள்
நான்கும்
சிந்தையே யாகக் குணமொரு மூன்றும் திருந்து
சாத்துவிகமே ஆக
இந்து வாழ் சடையானாடும் ஆனந்த எல்லையில் தனிப்
பெருங்கூத்தின்
வந்த பேரின்ப வெள்ளத்துள் திளைத்து மாறிலா மகிழ்ச்சியின்
மலர்ந்தார் "

இனி, வாரவழிபாடு தமிழனுக்கு அவசியமா என்ற கேள்வியைச் சிலர் எழுப்பலாம். அவசியம் மனிதனுக்கு இவ் வழிபாடுவேண்டும். ஏழை தவறு பண்ணுவதில்லை. செல்வன் தான் தவறு செய்கிறான். கடவுள் அருள் இல்லையானால் ஒருவனிடம் செல்வம் தங்குமா? முன்னோர் செய்த புண்ணியப் பேற்றாலேயே தன்னிடம் செல்வம் நிலைக்கிறது என்ற நினைவு வேண்டும். திருவருள் தோய்வுவேண்டும். அத்திருவருள் தோய்வில் நிலைக்காமல் மனித மனம் அலைந்துகொண்டே யிருக்கும். அது நல்லது என்றும் இது நல்லது என்றும் ஓடிக்கொண்டே யிருக்கும். சமய நம்பிக்கை ஒன்றினால்தான் இந்த மனம் அலைவதை நிறுத்தமுடியும். விஞ்ஞானிகளெல்லாம் சமய நம்பிக்கை - கடவுள் உணர்ச்சி உடையவர்களாக மாறி வருகின்றார்கள். அவர்கள் ஆராய்ச்சிகளுக்கு எல்லாம் அப்பாற் பட்டு பரம்பொருள் ஒன்று உண்டென்ற முடிவுக்கு வந்து கொண்டிருக்கின்றனர். இத்தகைய பெருண்மைவழிச் செல்ல அழைப்பதுதான் சமயமும் வழிபாடும். போகிற வழிக்குரிய நற்பொருள் தேட அழைப்பதுதான் குறிக்கோள். அதனைத் தெளிவாக உணர உள்ளுணர்ச்சி வேண்டும். சைவர்கள் விரதங்களைத் தவறாது அனுஷ்டிக்கிறார்களா? ஸ்ரீவித்யை, பஞ்சாட்சரம் ஓதுகின்றார்களா? செல்வம் வளரவேண்டுமானால் பழைய அநுஷ்டானங்களைக் கைவிடலாகாது அல்லவா?

அனுஷ்டானங்களைக் கைக்கொள்ளாமல் மேடைப்பிரசங்கம் புரிவது தகாது. மேடைப் பிரசங்கத்தால் மட்டும் நாடு பயன்

பேற்றுவிடாது. அருள் நிறைந்த மேடைப் பிரசங்கத்தால் நாடு பயன்பெறும். "நான் மறக்கினும் சொல்லும் நா நமச்சிவாயவே" என்றார்களே அந்த நிலை வரவேண்டும்.

"நமச்சிவாயவே ஞானமும் கல்வியும்
நமச்சிவாயவே நானறிவிச்சையும்
நமச்சிவாயவே நாநவின்றேத்துமே
நமச்சிவாயவே நன்னெறிகாட்டுமே"

என்று அப்பர்சுவாமிகள் பஞ்சாட்சர தியானப் பலன் சொல்கிறார்கள். அந்த பஞ்சாட்சர உபதேசத்தை ஓர் ஆசாரியன் வழிநின்று உபதேச முறையில் பெற்று உய்யவேண்டும்.

இவ் வார வழிபாட்டுக் கூட்டத்தில் இச்சிந்தனைகளோடு உலகுக்காக வாழ்ந்த பெருந்தகையாராகிய குருஞானசம்பந்தப் பெருமான் உபதேசம் ஒன்றையும் சிந்திப்போம். அவர்கள் அருளுகிறார்கள்:

"பரபரக்க வேண்டாம் பலகாலும் சொன்னேன்
வரவரக் கண்டாராய் மனமே—ஒருவருக்கும்
தீங்கு நினையாதே செய்ந்நன்றி குன்றாதே
ஏங்கி இளையா திரு."

இவ்வுபதேசத்தை இவ் வார வழிபாட்டுக் கழகத்தினர் என்றும் மனத்திருத்திக்கொள்ளவேண்டும். நம்மால் பிறர்க்கு நன்மை இல்லாவிட்டாலும் தீமையாவது செய்யாமல் இருக்கவேண்டும். "எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்ந் நன்றி கொன்றமகற்கு" ஆதலால் நன்றி மறத்தலாகாது. "தம்மின் மெலியாரை நோக்கித் தமதுடைமை அம்மாபெரி தென்று" அகமகிழ்தல் வேண்டுமேயன்றி ஏங்கி இளைத்தலா காது. "சிவாயநமவென்று சிந்தித்திருப்போர்க்கு, அபாயம் ஒருநாளும் இல்லை; உபாயம் இதுவே" என்ற ஔவைமொழி நினைவிலிருக்கவேண்டும். ஆம்; அதுவே நல்வழி.

மகுடம் போடும்போது அனைவரும் முழங்கவேண்டும். பகவான் நாமத்தைச் சொன்னால்தான் உய்திபெறலாம்.

ஐயனே அரனே என்று அரற்றினுல் உய்யலாம். நம : பார்வதீ பதயே என்றுல் அம்மையப்பரை வணங்குகின்றேன் என்று பொருள். அதனை உணர்ந்து வாயார முழங்கவேண்டும்; அதிற் கொஞ்சமும் வெட்கப்படலாகாது. அவன் திருநாமம் சொல்ல ஏன் தயங்கவேண்டும் ?

இன்றைய வாரவழிபாடு மூன்ருவது வாரவழிபாடு அல்லவா? எங்கள் பரமாசாரிய சுவாமிகள் அருளிய மூன்று அருள் விளக்கங்களை இன்று நாம் நினைவுகூர்தல் வேண்டும். பதி உண்மை, பசு உண்மை, பாச உண்மை - இவற்றைச் சிவபோகசாரத்தில்,

" என்னை அறிவென்ருன் என்னறிவில் ஆனந்தந்
தன்னைச் சிவமென்ருன் சந்ததமும்—என்னை உன்னைப்
பாரா மறைத்ததுவே பாசம்என்ருன் இம்மூன்றும்
ஆராய்ந் தவர்முத்த ராம் "

என்பது அப்பாடல். பாசத்தை நீங்கிப் பதியைச் சேர பஞ்சாட்சரமே துணை ; சிவபஞ்சாட்சரமும், பக்த பஞ்சாட்சரமும் எனப்படும் மந்திரங்களே. ஆம் ! " நால்வர் பொற்ருள் எம் உயிர்த் துணையே " என்ற முறையில் உயிர்த்துணை. இவ்வுயிர்த் துணையை உணர்ந்து செயலாற்ற வேண்டும். அன்பர்கள் அனைவரும் நலம் பல பெற்று நீடுவாழ வேண்டும் என்று செந்தமிழ்ச்சொக்கர் சேவடி சிந்திக்கின்ருேம்.

" ஆறுதலை இல்லை அடியேனுக்கு அன்பாகத்
தேறுதலை சொல்வார் சிலரில்லை—வேறெனக்குத்
திக்காரும் இல்லை சிவனே பழிக்கஞ்சிச்
சொக்கேநின் தாளே துணை. "

# கங்கைகொண்ட சோழேச்சுரத் திருப்பணிக்குழு

உள்நெகிழ்ந் துடலம் நெக்குமுக் கண்ணு
ஒலமென் றேலமிட் டொருநாள்
மண்ணில் நின்றலறேன் வழிமொழிமாலை
மழலையஞ் சிலம்படிமுடிமேல்
பண்ணிநின் றுருகேன் பணிசெயேன் எனினும்
பாவியேன் ஆவியுள் புகுந்தேன்
கண்ணின் நின்றகலான் என்கொலோ கங்கை
கொண்ட சோளேச்சரத்தானே.

— கருவூர்த்தேவர்

சென்ற மாதம் தருமையாதீனம் 25 ஆவது ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் கங்கைகொண்ட சோழபுரத்தில் ஏகதின லக்ஷார்ச்சனையும், பெருந் திட்டத்தில் பெருமானுக்கு அபிஷேகங்கள் நடத்தியதும், அக்கோவிலில் எழுந்தருளியுள்ள துர்க்காம்பிகைக்கும், நவக்ரகத்திற்கும் அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் நடத்தியதும் அன்பர்கள் அறிவர். அன்று தரிசனத்துக்கு எழுந்தருளி வந்த திருப்பனந்தாள் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்கள் அங்கு நிகழ்ந்திருக்கும் சிறப்புக்களைக் கண்டு மகிழ்ச்சி பெருக இவ்வாலயத்தில் மூர்த்தங்களுக்கு அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றால் உலக மக்கள் நன்மை பெறுவர். இது போன்ற கோவில்களுக்குத் திருப்பணி செய்து கும்பாபிஷேகம் செய்தலே சிறப்பான பணியாகும் என்று குறிப்பிட்டார்கள். இதற்கு முன்னமேயே ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தில் பெருமானுக்கு அபிஷேக ஆராதனைகள் நடந்துகொண்டிருந்தபொழுதே பெருமானிடம் மகாகும்பாபிஷேகம் கொள்ளவேண்டும், "ஆனால் பெருங் காரியம். திருவருள் துணையிருந்து செய்யவேண்டியது. திருவுளம் யாதோ" என்று கசிந்து உருகித் திருவுளங் கொண்டார்கள்.

எதிர்பாராதவிதமாக 1—2—60 தருமை ஆதீனத் திருக்கோவில்களில் குத்தாலம் ஸ்ரீ உக்தவேதீஸ்வரசுவாமி ஆலய

கும்பாபிஷேகத்துக்கு தஞ்சை இந்து அறநிலைய உதவி ஆணையர் திரு. கு. சோமசுந்தர தேசிகர் (M. A.) அவர்கள் வந்திருந்தார்கள். கங்கைகொண்டசோழபுரம் கும்பாபிஷேகம் செய்யவேண்டிய நிலையிலிருக்கிறது. அரசியலாரும் உதவினால் பொதுமக்கள் உதவியும் கிடைக்கும் என்று ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானத்தில் திருவுளம் பற்றினார்கள். அரசியலார் இதற்காக ரூ. 15,000 உதவி அளித்திருப்பதாகவும் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானத்தில் திருவுளங்கொண்டால் அப்பெரிய திருப்பணி நிறைவுறும் என்றார்கள் துணை ஆணையரவர்கள். திருவுளத்தில் தோன்றிய ஒரு எண்ணம் உருக்கொண்டது. உடனே அங்கு ( குத்தாலம் ) கும்பாபிஷேக தரிசனத்துக்கு வந்திருந்த சைவப்பெருமக்களில் காட்டுமன்னார்குடி நாட்டுச் சின்னப்பண்ணை திரு. M. இராமலிங்கம் பிள்ளை அவர்கள், தலைவர். திருக்கடவூர் பிச்சைக்கட்டளை அதிபர், திரு. K. கனகசபைப்பிள்ளை அவர்கள் துணைத் தலைவர். சிதம்பரம் திரு. G. சபாபதிப்பிள்ளை. மாயூரம், திரு. கு. கிருஷ்ணமூர்த்திப் பிள்ளை. திருச்சி திரு. G. வரதராஜ பிள்ளை (B. A.) கங்கைகொண்டசோழபுர ஆலய நிர்வாக அதிகாரி இவர்களைச் செயலாளராகவும், சீகாழி பெருநிலக்கிழார் திரு. S. விசுவநாத முதலியார் அவர்கள் பொருளாளராகவும் அதற்கு உதவிக்கு வேண்டிய உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்வதென்றும் முடிவாயிற்று. அவ்வன்பர்கள் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்களே இந்தத் திருப்பணிக் குழுவிற்குப் போஷகராக எழுந்தருளியிருந்து ஊக்கமளித்தருள வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானத்திலும் ஏற்று அருளியதோடு தங்கள் நிர்வாகத்திலிருந்தும் ரூ. 15000 இதற்காக அளிப்பதாகவும் திருவுளம்பற்றினார்கள்.

வாழ்க திருவருள் ! ஓங்குக அறம் !

வளர்க திருப்பணி !

குத்தாலம் மகாகும்பாபிஷேகத் திருநாளில் (1—2—60)



கங்கைகொண்ட சோழேச்சரத் திருக்கோவில் திருப்பணிக்குழு அமைத்தல்
தஞ்சை இந்து அறநிலைய இலாகா துணை ஆணையர்.
திரு. K. சோமசுந்தர தேசிகர் M. A., அவர்கள் அரசாங்க உதவி அறிவித்தல்

தருமையாதீனத்திற்குச் சொந்தமான குத்தாலம் ஸ்ரீ உக்தவேதீசுவரசுவாமி தேவஸ்தான
மகாகும்பாபிஷேகத்தில் (1—2—60)



கோயில் மேல்தளத்தில் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்களும்
சைவப் பெருமக்களும்



தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்களும்
மெய்யன்பர்கள் கூட்டமும்

## திருமயிலைத் திருப்புகழ் (உரையுடன்)

உரையாசிரியர் ; திருமுருக கிருபானந்தவாரி அவர்கள், திருமயிலை திருக்கபாலீசுவரர் தேவஸ்தான வெளியீடு, விலை 40 ந.பை. பக்கங்கள் 65.

கிருபானந்தவாரியவர்கள் திருப்புகழில் தோய்ந்து நாடெங்கும் அவ்வருள் அனுபவத்தைச் சொற்பொழிவுகள் வாயிலாக வெளியிட்டு வருபவர்கள். சமயப் பேச்சாளரில் சிறந்து விளங்குபவர்கள். அன்னார் எழுதிய பத்துத் திருப்புகழ்ப் பாடல்களின் உரை இது. செந்தமிழ்ச்செல்வர், திரு. கி. வா. ஜ. அவர்கள் முன்னுரை நூலுக்கு அழகு செய்கிறது. நல்லறங்காவலரின் வாழ்த்துரையும் முன்னர் உள்ளது. ஒவ்வொரு பாடலுக்கும் தெளிவான பதவுரை, பொழிப்புரை, விரிவுரை, கருத்துரைகள் தரப்பட்டுள்ளன. சாத்திரக் கருத்துக்களும் மேற்கோள்களும் பொருத்தமான இடங்களில் உள்ளன. ஆசிரியருடைய மதி நுட்பம் உரையைப் படிக்குங்கால் நன்கு விளங்குகிறது. திருமயிலைத் திருப்புகழைப் பாராயணம் புரிந்து முருகனருள்பெற முயலும் நல்லன்பர்களும் இது ஒரு பெரும் பேறு. தேவையுள்ளோர் தேவஸ்தானத்தாருக்கு எழுதிப்பெறலாம்.

— சோ. சிங்காரவேலனார்.

சந்த...

அனு... முடி...
போ...தும், தபால் எழுதும்போது தங்க...
கு...த்து எழுதுதல் வேண்டும். சந்தாத்...
ஆதீன வெளியீடுகள் முதலியவைகளுக்கும்...
கூடாது. அப்படி அனுப்பினால் 'ஞானசம்ப...
கென்று சேர்த்து வரவு வைத்துக்கொள்ளப்படும்.

பதில் விரும்புவோர் போதுமான தபால் பில்லை...
புதல் வேண்டும். விலாசம் மாறுதல் ஏற்பட்டால் உ...
காரியாலயத்திற்குத் தெரிவித்தால் காலதாமதமின்றி...
அனுப்ப சௌகரியமாக இருக்கும்.

சில சந்தா நேயர்கள் இந்த அறிவிப்பைச் சரியா... காமல் காலதாமதமாக சந்தாத்தொகையை அனுப்பி... பத்திரிகை ஏன அனுப்பவில்லை என்று கேட்டுக் கடிதம் எழுதுகிறார்கள் — காலதாமதமாக வந்து சேரும் சந்தாதாரர்களுக்கு அடுத்தமாத இதழுடன்தான் சேர்த்து அனுப்ப முடியும் என்ற விபரத்தை மீண்டும் தெரிவித்துக்கொள்கிறோம். ஒவ்வொரு மாதம் 10உ பத்திரிகை அனுப்ப தபால் சலுகை கட்டணம் எங்களுக்கு உண்டு. அதன்பிறகு பத்திரிகை அனுப்ப வேண்டுமானால் முழுதபால் கட்டணம் ஒவ்வொரு புத்தகத்திற்கும் சுமார் 11 ந. பை. ஸ்டாம்பு செலவாகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

**ஆண்டுக் கையொப்பம்**

உள்நாடு ரூ. 1—50 வெளிநாடு ரூ. 2—00

—: செயலாளர் :—

ஞானசம்பந்தம் காரியாலயம், தருமையாதீனம்
மாயூரம் அஞ்சல் :: தஞ்சை மாவட்டம்

Printed & Published by K. Sundaresa Iyer, Agent, Dharmapuram Adhinam at the Gnanasambandam Press, Dharmapuram. (Mayuram). 10—2—60.